

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

## சித்திரை - ஆனி


மலர் 10 இதழ் 5, 6


## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| வண்டு ஸ்தோத்ரம் | 5 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 9 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 13 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ப்ரபோத சிந்தாமணி | 18 |
| பீஷ்மஸ்தவராஜம் - 4 | 20 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 22 |
| ஆனி மாத விசேஷ தினங்கள் | 28 |
| ரோக நிவாரணஸ்லோகா | 29 |
| ஸ்ரீ மடம் நிகழ்ச்சிகள் | 30 |
| ஆசாரக் கோவை | 34 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி | 38 |
| புராணக்கதை | 42 |
| வேதாந்த ஸாரம் | 45 |
| மகாபாரத சுருக்கம் | 48 |
| ஸ்ரீமத் பாகவதம் காட்டும் வாழ்க்கை நெறி | 52 |
| தத்வ சிந்தனை | 56 |
| ஸனாதன தர்மம் கேள்வி பதில்கள் | 58 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்




# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்



அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

## ஆலயம் காப்பது சாலவும் நன்று

நம் பாரத நாட்டின் ஆத்மவாக விளங்குவது ஆலயங்களே. ஆஸேது ஹிமாசலம் வானுயர்ந்த கோபுரங்கள், பரந்து விரிந்த தாழ்வரைகள், கடவுள் சான்னித்யம் கொண்ட கட்டடங்களாக உலக மக்களை வியப்புறச் செய்கின்றன. இங்கு மட்டுமல்ல கீழ் தேசங்களில் கூட இத்தகைய ஆலயங்கள் நம் பெருமையை பறை சாற்றும். அங்கோர்வாட் ஆலயம் ஒரு சின்ன சான்று. ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று மக்கள் மறக்காமல் இருக்க வேண்டி சொல்லப்பட்ட வாக்யம்.

இன்று இந்த ஆலயங்களை காப்பது மக்களின் கடமை என்று கூறும் அளவிற்கு நிலைமை போய் விட்டது. ஆலயங்களில் பூஜைகள் நன்றாக நடக்க அரசர்களும், தனவந்தர்களும் அளித்த நன்கொடைகள் ஏராளம். மிகப் பெரும் நல் எண்ணத்தில் அவர்கள் அளித்த கொடைகள் பாழாக்கப்பட்டுள்ளன. அரசு ஆலயங்களில் நுழைந்தது விபரீதமாகப் போய் விட்டது. மற்ற மதங்களில் இந்த தலையீடு கிடையாது. அவைகளை நிர்வகிக்க தனி போர்ட் இருக்கிறது. நமது மதத்தில் தான் இப்படி ஒரு நெருக்கடி. சமீபத்தில் ஈசா நிறுவனத்தின் ஸ்தாபகர் ஜக்கி வாஸுதேவ் தமிழ் நாட்டில் கோவில்களை அரசிடமிருந்து மீட்க ஒரு இயக்கம் ஆரம்பித்துள்ளார். நல் எண்ணத்தில் எழுந்த நல் வினையே. அரசிடம் கோயில்கள் இருப்பது போதாது என்று ‘‘கோவில் நிலங்களை ஏழை மக்களுக்கு பட்டா போட்டுத் தரவேண்டும் என்று ஓர் அரசியல்வாதி பேசியிருக்கிறார். கிட்ட தட்ட 40000 கோவில்கள் தமிழ் நாட்டில் மட்டும் உள்ளன.

அவைகளில் 10000த்திற்கும் மேற்பட்ட கோவில்களில் ஒரு காலம் பூஜை கூட நடப்பதில்லை. இந்த அவலம் களையப்பட வேண்டும். இப்போது இருக்கும் அற நிலையத் துறை என்ன செய்கிறது? கோவில்களிலிருந்து வரும் வருமானம் வேறு பல துறைகளுக்குச் செலவிடப்படுகின்றது. இப்படி நடக்க நாம் அனுமதிக்கக் கூடாது, கோவில்கள் நமது பொக்கிஷங்கள். அவைகளைக் காப்பது நம் கடமை. சில அவசியமான மாற்றங்களை செய்யவேண்டும்.

அவையாவன :-

1. அற நிலையத்துறையை தனியாரும் அரசும் சேர்ந்து கவனிக்கும் துறையாக மாற்ற வேண்டும்.
2. எல்லா கோவில்களிலும் இரண்டு கால பூஜை நடக்க வேண்டும்.

3. அர்ச்சகர்களுக்கு நல்ல சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்.

4. உபரி வருமானம் வரும் கோவில்களின் வருமானத்தை நலிந்த கோவில்களுக்குத் தர வேண்டும்.

5. கோவில்களின் சொத்து விவரம், அதன் மதிப்பு வெளியிடப்பட வேண்டும்.

6. கோவில்களில் நடக்கும் transactions எல்லாம் வெளிப்படையாக இருக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் நிதி நிலை அறிக்கையை வெளியிட வேண்டும்.

7. கோவில்களின் வருமானத்தில் நித்ய அன்ன தானம் செய்தல் வேண்டும்.

8. உபரி வருமானத்தில் கல்யாண மண்டபம் (அடிப்படை வசதிகள் இருந்தால் போதும்) அமைத்து அனைத்து மக்களுக்கும் பயன்படுத்தப்பட வேண்டும்.

9. கோவில்களில் சுத்தம், தூய்மை காப்பாற்றப்பட வேண்டும்.

10. அந்தந்த கோவிகளின் தல புராணங்கள் வெளியிடப்பட வேண்டும்.

இவையெல்லாம் சில கோரிக்கைகள்தான். இன்னும் பல உள்ளன. மேற்கூறியவற்றைச் செய்ய தொடங்கினாலே போதும். மற்றவை நடக்கத் தொடங்கும். இப்படிச் செய்ய ஆரம்பித்தாலே நம் ஆலயம் என்னும் பொக்கிஷங்களை என்றென்றும் காப்பாற்றலாம். அப்படிச் செய்வது நம் கடமை. செய்ய முற்படுவோம் என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்களின் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

## அறிவிப்பு

*வாசகர்களுக்கு*

*நம் தேசத்தில் நடக்கும் தற்போதைய சூழலை நீங்கள் அறிந்ததே. ஆகவே மே மாத இதழை ப்ரசுரம் செய்ய இயலாமைக்கு வருந்துகிறோம்.*


*எனவே இந்த மாத இதழையும் சேர்த்து மே - ஜுன் 2021 மாத இதழாக வெளிவருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*நம் தேசம் மற்றும் உலக சமுதாயம் எதிர்கொள்ளும் இந்த கடினமான காலங்களில், முயற்சிகளோடு பிரார்த்தனையும் அவசியம். பூஜ்யஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் ஆக்ஞைப்படி ஆஸ்திகர்கள் அனைவரும் திருநீற்றுப் பதிகம், கோளறு பதிகம், கந்த சஷ்டி கவசம் ஆகிய ஸ்லோகங்களை பாராயணம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

# வண்டு ஸ்தோத்ரம்

### ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## மனம் ஸரியாக



வெளியிலே பார்ப்பதற்கு ஒரு குடம் அழகாக இருக்கிறது. ஆனாலும் அதற்கு அடியிலே நாலு சின்ன ஓட்டை இருந்துவிட்டால், உள்ளே அம்ருதத்தைப் பிடித்து வைத்திருந்தால் கூட எல்லாம் ஒழுகித்தானே போகும்? அந்த மாதிரிதான், வெளிப்பார்வைக்கு நாம் ரொம்ப ஸரியாக இருக்கிற மாதிரி தோன்றலாம். பணம், படிப்பு மற்ற லௌகிகமான ஸந்தோஷங்கள் நமக்கு யதேஷ்டமாக இருக்கலாம். ஆனாலும் அத்ருப்தி, கோபம், பொறாமை, அழுகை மாதிரியான நாலு பொத்தல் நமக்குள் கண்ணுக்குத் தெரியாமல் இருந்துவிட்டால் ஆனந்தம் என்கிற அம்ருதத்தை நமக்குள் பிடித்து வைத்துக் காப்பாற்றிக்கொள்ள முடியாது.

ஆகையினால் தான் ஆசார்யாள் 'ஷட்பதீ ஸ்தோத்ரம்'' ஆரம்பிக்கும்போதே நம் மனஸிலிருந்து கெட்ட உணர்ச்சி வேகங்கள், அசுத்தங்கள் எல்லாம் போய், அது சுத்தமாக வேண்டுமென்று எடுத்துக் காட்டியிருக்கிறார். அப்படி ஆவதற்கு பகவானிடம் ப்ரார்த்தித்து விட்டால் போதும், அவன் க்ருபையாலே இதை ஸாதித்துக் கொள்ளலாம் என்று வழி காட்டியிருக்கிறார்.

**அவிநயம் அபநய விஷ்ணோ**
**தமய மந : சமய விஷ்ய ம்ருக த்ருஷ்ணாம்**
**பூத தயாம் விஸ்தாரய**
**தாயாய ஸம்ஸார ஸாகரத : ॥**

இது ''ஷட்பதி'' முதல் ச்லோகம்.

முதலில் ' அவிநயம் அபநய என்று ஆரம்பிக்கிறது. விநயம் என்ற வார்த்தை எல்லோருக்கும் தெரிந்திருக்கும். அதற்கு முன்னாடி 'அ' என்று சேர்த்தால் விநயத்துக்கு opposite (எதிர்மறை) என்று அர்த்தம். விநயம் என்றால் பணிவாக, அடக்கமாக, இருப்பது. அவிநயம் என்பது திமிராக, மரியாதையில்லாமல் இருப்பது, ' அபநய' என்றால் ' போக்குவாயாக' என்று அர்த்தம்.

'உபநயனம்' என்று ஒரு வார்த்தை சொல்கிறோம். உப - அருகில்; நயனம் - கொண்டு விடுவது - ஒரு பையனுக்குப் பூணூல் போட்டு குருகுல வாஸம் பண்ணுவதற்காக ஆசார்யரின் ''பக்கத்தில் கொண்டு விடுவது' என்று அர்த்தம். ஒன்றிடம், இன்னொன்றைக் கொண்டு சேர்ப்பது ' உபநயனம்' அதற்கு opposite (எதிர் மறை) தான் 'அபநயனம்', அதாவது ஒன்றிடம் இருப்பதை அதிலிருந்து பிரித்துத் தள்ளிவிடுவது 'அபநயம்'. நம்மிடம் இப்போது திமிர்த்தனம், கொழுப்பு, அடங்காமை (அவிநயம்) இருக்கிறது. இதை நம்மிடமிருந்து பிரித்துத் தள்ளுமாறு (அபநயனம் செய்யுமாறு) ஸாக்ஷாத் ஸ்ரீ மஹா விஷ்ணுவிடம் ஆசார்யாள் ப்ரார்த்திக்கிறார். இது தான் ஷட்பதி ஸ்தோத்திரத்தின் ஆரம்பம்.

**அவிநயம் அபநய விஷ்ணோ !**

'விஷ்ணோ - ஹே விஷ்ணுவே !' என்று நேரே பகவானை நிறுத்தி வைத்துக் கூப்பிடுகிற மாதிரி கூப்பிட்டு ப்ரார்த்திகிறார். 'ஜனங்களுக்கு இருக்கிற தோஷங்களைப் போக்கடி என்று அவர் ஜனங்களைத் தம்மிடமிருந்து வேறேயாக பிரித்து வைத்து, அவர்களுக்காக (அவர்களுடைய behalfல்) வேண்டிக் கொள்ளவில்லை. நம்முடைய தோஷங்களெல்லாம் தம்மிடமே இருக்கிற மாதிரி பாவித்து, தம் ஈச்வரத்வத்தை குறைத்துக் கொண்டு, தமக்காகவே வேண்டிக் கொள்கிற மாதிரி ப்ராத்திக்கிறார். தமக்காக, உலக ஜனங்களுக்காக என்று பிரித்துக் கூடக் காட்டாமல் எல்லோருக்கும் பொது 'விநயமில்லாமையைப் போக்குவாயாக' என்று ஆரம்பிக்கிறார்.

''அவிநயத்தைப் போக்கு' என்று ஆசார்யாள் ப்ராத்திக்கிறார் என்றால் 'விநயத்தை உண்டாக்கு'' என்றே அதற்கு அர்த்தம். இப்போது நம்மிடம் இருப்பது அவிநயம் தானே? இல்லாதது விநயம். அதனால் தான் 'விநயத்தை உண்டாக்கு' என்பதாக இல்லாததைக் கொண்டுவர சொல்லாமல், (நம்மிடம்) இருந்து கொண்டு கெடுதல் பண்ணும் 'அவிநயத்தைப் போக்கு' என்றார்.

# முக்யப் பண்பு விநயமே

இப்போதெல்லாம் பண்பு, நாகரிகம், கலாசாரம், கல்ச்சர் என்கிற வார்த்தைகள் நிறைய அடிபடுகின்றன. ஆனால் இதுகளைச் சொல்லும் போது விநயத்தை முக்யமான அம்சமாக நினைத்து நாம் பேசவில்லை. முன் காலத்தில் இப்படியில்லை. அப்போது கல்ச்சர், கலாசாரம் என்றாலே அதற்கு முதல் லக்ஷணமாக விநயத்தைத்தான் நினைத்தார்கள். கல்ச்சர், கலாசாரம் என்ற வார்த்தைகளுக்கும், கல்வி என்ற வார்த்தைக்கும் ரொம்பவும் ஸம்பந்தம் இருப்பதைக் ’கல்’ என்பது இவை எல்லாவற்றுக்கும் பொதுவாக இருப்பதிலிருந்தே தெரிந்துகொள்ளலாம். கல்வி பெற்றவர்கள் தான் cultured ஆக, நாகரிகமுள்ளவர்களாக இருப்பார்கள். இங்கே கல்வி என்கிறபோது எழுதப் படிக்கத் தெரிவதைச் சொன்னதாக அர்த்தமில்லை. நல்ல விஷய ஞானம் தான் கல்வி. அதை ’வித்யா’ என்று சொல்வார்கள். அந்த வித்யையின் வாஸ்தவமான ப்ரயோஜனம் நமக்கு தேடிய ஞானம் வந்துவிட்டது என்று திமிர்பிடித்து அலையாமல் இன்னமும் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது’ என்று அடங்கி, விநயமாக இருப்பது தான்.

ஆதிகாலத்தில் சிஷ்யனானவன் குருவிடமும், தான் கற்கிற கல்வியிடமும், பகவானிடமும், ஸகல லோகத்திடமுமே அடங்கி விநயமாக இருந்ததால்தான் ஆத்ம வித்யையை யதேஷ்டமாக ஸம்பாதித்து வந்தான். ப்ரம்மசாரியானவன் குருகுல வாஸம் செய்கிற காலத்தில் அவன் எத்தனை பெரிய மிராசுதார் வீட்டுப் பிள்ளையானாலும் வீடு வீடாகப் போய் பவதி பிக்ஷாம் தேஹி’ என்று பிச்சை எடுத்து வரவேண்டும் என்று வைத்தார்களே, அது முக்யமாக இந்த அடக்க குணத்தை உண்டாக்கத்தான்.

அந்தக் காலத்தில் குரு, முதல் பாடமாக விநயத்தைத் தான் சொல்லிக்கொடுத்தார். வெறுமே சொல்லிக் கொடுத்ததால் வருகிற பாடமா அது? வாஸ்தவமாக அவரே, மாணவர்கள் தாமாக அவருக்கு அடங்கி மரியாதை செலுத்தும்படியான ஆத்ம குணங்களோடு இருந்துவந்தார்; வாழ்ந்துகாட்டினார். இப்போது தாம்பும் அறுதல், தோண்டியும் பொத்தல் என்கிற ஸ்திதியாக இருக்கிறது.

இப்படியே ஒரு தேசத்து ராஜாவும் ப்ரஜைகளின் மற்ற அபிவ்ருத்திகளைப் போலவே அவர்களை விநயமுள்ளவர்களாக இருக்கச் செய்வதில் விசேஷ கவனம் செலுத்தி வந்தான். சாஸ்த்ரத்தில் ராஜாவின் கடமைகளைச் சொல்கிற போது முதலில் ‘விநயதான’’த்தைச் சொல்லிவிட்டு, அப்புறம் தான் ‘ரக்ஷணம்‘, ‘பரணம்‘ என்பதைச் சொல்லியிருக்கிறது. ஜனங்கள் எல்லோரும் அவரவருக்கான தொழிலில் ஈடுபட்டு,

ஸம்பாதித்து, வாழ்க்கை வசதிகளோடு இருக்குமாறு ஸஹாயம் பண்ணி அவர்களைத் தாங்குவது 'பரணம்', உள் நாட்டுக் கலகம், வெளிநாட்டு யுத்தம் முதலியவற்றிலிருந்து அவர்களைக் காப்பது 'ரக்ஷணம்'. தற்காலத்தில் ராஜாங்கக் ரக்ஷணமும், பரணமும் மட்டுமே நினைக்கப்பட்டாலும் சாஸ்த்ரப்படி இதற்கெல்லாம் முந்தி விநய தானம் தான் வருகிறது. அதாவது ஜனங்களைப் பணிவுப் பண்போடு அடங்கியிருக்கும்படிப் பண்ணவேண்டும். எப்படிப் பண்ணுவது என்றால், முறையான கல்வியினால், ஸத் உபதேசத்தினால், மதாநுஷ்டானங்களினால், தெய்வ விச்வாஸத்தினால் பண்ணவேண்டும்.

அடக்கம், பணிவு, ம்ருதுவான நடவடிக்கை, (ஜென்டில்மான்' என்கிறார்களே அதில் உள்ள - ஜென்டில்னெஸ்'), பிறத்தியாருக்கு விட்டுக் கொடுக்கிற ஸ்வபாவம், அஹங்காரமே இல்லாமலிருப்பது எல்லாம் சேர்ந்தது தான் விநயம் என்கிற குணம். நிஜமான கல்வி இதை ஊட்டவே ஏற்பட்டது.

இதனால் தான் மாணாக்கன், சிஷ்யன் என்பவனுக்கே 'விநேயன்' என்று பேர். எவன் விநயமுள்ளவனோ அவனே கடமையாக விநேயன் சீடன் என்பதற்குப் பதில் விநேயன் என்றே சொல்வார்கள். (தொடரும்)


ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

## ஸ்வர்ண ரத சேவா



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

♦ அனுஷம் ♦ மூலம் ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**
ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

# தமயந்தி

### தளராத மனம்

நாகமோ நளனை அஞ்ச வேண்டாமென்று கூறித் தன் கடியினால் உடலில் உள்ள கலியை அடக்கி வைப்பதாக உறுதியளித்தது. மேலும் இரண்டு உடைகளைக் கொடுத்து, தகுந்த நேரத்தில் அவற்றை அணிந்து பழைய பொலிவு பெருவானென்று வாழ்த்தி அயோத்தி மன்னன் ருதுபர்ணனிடம் செல்ல வழிகாட்டியது. ருதுபர்ணனிடம் நளன் தன்னை அசுவ சாஸ்திர வித்தகனென்று அறிமுகப்படுத்திக் கொண்டு பாகுகன் என்ற தேர்ப்பாகனாக ஊழியம் செய்து வரலானான்.

காட்டில் நளனால் கைவிடப்பட்ட தமயந்தி அங்குமிங்கும் அலைந்து நளனைத் தேடிக் களைத்து விட்ட போது ஒரு மலைப் பாம்பினால் விழுங்கப் பட்டாள். அவளுடைய அழுகுரலைக் கேட்ட வேடன் ஒருவன் அப்பாம்பினைக் கொன்று அவளை மீட்டான். ஆனால் காட்டில் அப் பேரழகி ஆதரவு ஏதுமின்றிக் கைவிடப் பட்டவள் என்றறிந்ததும் அவளைப் பலவந்தம் செய்ய முயன்ற போது தமயந்தி தன் கற்பின் தூய்மையைத் தெய்வத்திடம் முறையிட்டுத் தன்னைக்



காக்கும்படி வேண்டியதும் அவ்வேடன் உலர்ந்த மரம் எரிவது போல் கருகி உயிரற்று வீழ்ந்தான்.

பித்துப் பிடித்தவள் போல் அலைந்த தமயந்தி ஒருநாள் முனிவர்களின் ஆசிரமம் ஒன்றைக் கண்டாள். அவர்களிடம் தன் வரலாற்றைக் கூறிக் கணவன் காணாது போனதைப் பற்றி முறையிட்டாள். முனிவர்கள் அவளுக்கு விரைவில் நன்மை நேருமென்று ஆசீர்வதித்து மறைந்தனர். ஆச்சரியமடைந்த தமயந்தி மீண்டும் கவலையுற்று ஒரு நதியோரம் சென்று ஆற்றைக் கடக்கும் துறையில் இளைப்பாறுகின்ற வணிகர் கூட்டத்தைக் கண்டாள். அவர்கள் அவளுடைய கிழிந்த ஆடையையும் அழுக்கடைந்த மேனியையும் கண்டு அஞ்சினர். சிலர் அனுதாபம் கொண்டனர்.

அக்கூட்டத்துடன் சென்று கொண்டிருந்த போது அவர்களுடன் ஒரு தடாகத்தின் கரையில் தங்கினாள். இரவில் அவர்களுடைய யானைகளைக் காட்டு யானைகள் தாக்கவே பெரும் குழப்பம் ஏற்பட்டது. கூட்டத்தினர் அவளுடைய தீய செயலின் விளைவே இது என்று அஞ்சினர். ஆயினும் ஒருவாறு தெளிந்த சிலருடன் சேதி நாட்டுக்குச் சென்றாள்.

சேதி நாட்டுத் தலைநகரில் நுழைந்த, பித்துப் பிடித்தவள் போன்ற தமயந்தியைப் பல சிறுவர்கள் துன்புறுத்துவதை அரசன் ஸுபாகுவின் தாய் பார்த்தாள். தமயந்தியிடம் அவளுக்கு பரிவு ஏற்பட்டது. அவளை அழைத்து அவளுடைய துன்ப வரலாற்றைக் கேட்டு அவளைத் தன்மகள் அநந்தைக்குச் சைநந்திரியாக நியமித்தாள். தமயந்தி அரசியிடம் தான் நளனின் மனைவி என்பதை மறைத்து விட்டாள்.

விதர்ப்ப நாட்டின் தலை நகரான குண்டினபுரத்தில் மன்னன் பீமனிடம் பேரக் குழந்தைகள் இருவரும் வளர்ந்து வரும் போது தன் மருமகனான நளனும் தன் மகளான தமயந்தியும் நிடத நாட்டை விட்டு வெளியேறி வனத்திற்குச் சென்றதை அவன் கேள்விப்பட்டான். வருந்திய மன்னன் அவர்களைத் தேடி அழைத்து வரும்படி பலரை ஏவினான். அவர்களில் சுதேவன் என்ற அந்தணன் சேதி நாட்டுக்குச் சென்று அரசனால் உபசரிக்கப்பட்டான். தனக்கு உணவு பரிமாறிய பெண்ணின் நெற்றியில் உள்ள மச்சத்தைக் கொண்டு அவள் தமயந்திதான் என்று உறுதி செய்து கொண்டான். ராஜமாதா தமயந்தியின் சிற்றன்னையே ஆவாள். ஆகவே, அவள் ஒரு புறம் துக்கமும் மறுபுறம் மகிழ்ச்சியும் அடைந்து அவளைத் தேற்றி பின்பு தகுந்த மரியாதையுடன் பல்லக்கில் விதர்ப்ப நாட்டுக்கு அனுப்பி வைத்தாள். சுதேவனுக்கு பீமராஜன் பரிசளித்தான்.

தாயின் வீட்டிலிருந்த போதும் தமயந்தி உள்ளத்தில் நளனின் பிரிவைத் தாங்காது துன்புற்றாள். தன் தாய் தந்தையரின் உதவியினால் அந்தணர்களை பல ஊர்களுக்கும் அனுப்பி கூட்டமான இடங்களில் சூதாடிப் பொருளிழந்து மனைவியைக் காட்டில் கைவிட்ட காவலனை இன்னும் அம் மனைவி எதிர்பார்ப்பதாகக் கூவச் சொன்னாள். விடையளிப்பவர்களை கவனித்து வரச் சொன்னாள். பல சாரணர்களும் அவ்வாறே சென்றார்கள்.

பர்ணாதன் என்ற அந்தணன் அயோத்திக்குச் சென்றான். அங்கு ருதுபர்ண அரசன் தேரிலிருந்து இறங்கி அரண்மனைக்குள் செல்லும் தருணத்தில் தமயந்தி கூறிய செய்தியை உரக்கச் சொன்னான். ஆனால் தேரின் குதிரைகளைக் கவனிக்க வந்த பாகுகன் அந்தணனிடம் தனியாக ‘பத்தினிப் பெண்டிர் எந்நிலையிலும் தம்மைக் காத்துக் கொள்வர்; விதி வசத்தால் கணவன் செய்ததிற்காக அவனை நிந்திக்க மாட்டார்கள்’’ என்று சொன்னான்.

பர்ணாதன் விரைந்து திரும்பி தமயந்தியிடம் இந்த நிகழ்ச்சியைத் தெரிவித்தான். தமயந்தி அவனுக்குப் பரிசளித்தாள்.

தமயந்தி தன் தாயைக் கலந்து ஆலோசித்து மீண்டும் சுதேவன் அந்த அந்தணனை அழைத்து மிக விரைவில் அயோத்தி சென்று ருதுபர்ண மன்னனிடம் தமயந்திக்கு அடுத்த நாளே சுயம்வரம் நடக்கப் போகிறதென்று அறிவிக்கச் சொன்னாள். அவ்வந்தணனும் அவ்வாறே செய்தான். செய்தியைக் கேட்ட ருதுபர்ணன் பாகுகனை அழைத்து மறுநாள் பொழுது புலருமுன் நூறு யோஜனை தூரம் செல்லக் கூடிய இரதத்தை ஆயத்தப் படுத்தச் சொன்னான். பாகுகன் தமயந்தியின் சுயம்வரச் செய்தி கேட்டு துக்கித்தான். எனினும் காற்றிலும் கடிதாகச் செல்லும் இரதத்தைச் செலுத்தினான். வழியில் காணப்பட்ட தன்றி மரத்தின் இலைகள் கனிகளின் எண்ணிக்கையை ஒரே நொடியில் ருதுபர்ணன் கூறக் கேட்டு இரதத்தை நிறுத்திய பாகுகன் ஒரு கிளையைப் பற்றி அவனுடைய கணக்கைச் சரிபார்த்து விட்டு ருதுபர்ணனிடமிருந்து அக்ஷயஹ்ருதய கணிதத்தையும், சூதாட்டத்தின் இரகசியங்களையும் மந்திரங்களுடன் அறிந்து கொண்டான். அப்போது கலி புருஷன் நளனுடைய உடலை விட்டு வெளியேறி அவனது கோபத்திற்கு அஞ்சி, தன்றி மரத்தில் நுழையும் போது நளனுடைய பெயரைச் சொல்லும் போது, கலியினிடமிருந்து பயமிராது என்று வரமளித்துக் மறைந்தான். நளனுடைய பாகுக வடிவம் மாறா விடினும் உடல் பொலிவு பெற்றது.

தேர் குண்டினபுரத்தில் நுழையும் போது அரசனின் குதிரைகள் நளனுடைய ரதம் செலுத்தும் கைவாகு ஒலி கேட்டுக் கனைத்தன. தமயந்தியும் அவ் ஒலியினை அடையாளம் கண்டு கொண்டாள். ருதுபர்ணனை பீமன் வரவேற்றான். ருதுபர்ணன் பீமனுடைய அரண்மனையில் கோலாகலம் இல்லாததைக் கண்டு அதிர்ச்சியை மறைத்து பீமனை வணங்கிச் செல்வதற்காக வந்ததாகத் தெரிவித்தான்.

வந்தவர்களில் ருதுபர்ணனும் அவனுடன் வந்த தன் கணவனின் பழைய தேரோட்டியான வர்ஷ்ணேயனையும் பார்த்து தமயந்தி சற்று ஏமாற்ற மடைந்தாள். ஆனால் குதிரைகளை கவனிக்க வந்த பாகுகனைக் கண்டவுடன் அவளுடைய உள் மனதில் ஒரு புது உணர்ச்சி ஏற்பட்டது. அவள் நளனோ என ஐயுற்றுத் தன் பணிப்பெண் கேசினியிடம் முன்பு சுதேவன் சூதாடியைப் பற்றி அயோத்தியில் சொன்ன சொற்களைச் சொல்லச் சொன்னாள். அதைக் கேட்ட பாகுகன் கண்களில் நீர் துளிக்க முன்பு தான் கூறியவற்றையே திரும்பச் சொன்னான். தமயந்தி பாகுகனை மேலும் நன்கு கண்காணிக்கும்படி கேசினியை ஏவி அவன் சமைத்த உணவில் சிறிது

எடுத்து வரும் படியும் சொன்னாள். பாகுகன் குறுகிய வாயிற்படியருகில் சென்றதுமே வாயில் தானாக பெரிதாகியது, கதவுகள் தாமே திறந்தன. ஒரு துரும்பை பாகுகன் வெயிலில் காட்டியவுடன் அது தீப்பற்றியது. அவனைச் சுற்றி யாவும் தூய்மையாக இருந்தன. அவன் பார்த்த கலங்களில் தானாகவே நீர் நிரம்பியது. பாகுகன் சமைத்த உணவை கேசினியிடமிருந்து பெற்றுச் சுவைத்த தமயந்தி சமையற் கலையில் வல்லவனை நளனின் கைத்திறம் அதில் இருந்ததை அறிந்து கொண்டாள். உடனே கேசினியிடம் தன் இரு குழந்தைகளையும் பாகுகனிடம் கொண்டு விடச் சொன்னாள். பாகுகன் அவர்களைக் கண்டதும் கட்டியணைத்துக் கொண்டு கண்ணீர் உகுத்தான். கேசினியை அங்கிருந்து போய் விடும்படிக் கூறினான்.

தமயந்தி கிலேசத்துடனும் ஆர்வத்துடனும் தன் தாய் தந்தையரின் முன்னிலையில் பாகுகனை அழைத்து வரும்படி கேசினியை ஏவினாள். அவனைக் கண்டு ‘காட்டில் பத்தினியை விட்டுச் செல்ல நற்கணவனுக்கு மனம் வருமா?‘ எனக் கேட்டாள். நளன் கலியினால் தான் பீடிக்கப்பட்ட வரலாற்றைச் சொல்லி விட்டு அவள் மறு சுயம்வரத்திற்காக ஏற்பாடு செய்ததைச் சாடினான். அவள் தான் குற்றமற்றவள் என்றும் அவனை வருவிப்பதற்காகவே இவ் உபாயத்தைச் செய்ததாகவும் கூறி தேவர்களே சாட்சி என வருந்தி அழுதாள். அப்போது வாயு பகவான் அசரீரியாக தமயந்தியின் தூய்மையை உறுதி செய்து வனத்தில் தேவர்கள் மூன்று ஆண்டுகளும் அவளைக் காத்த செய்தியைச் சொன்னார். பாகுகனும் அவள் குற்றமற்றவளே என்று தேறி, கார்க்கோடகன் முன்னம் தனக்களித்த இரண்டு உடைகளையும் அணிந்தவுடன் மீண்டும் அழகிய நளனின் உருவத்தைப் பெற்றான். பீமன் அவர்களை வாழ்த்தினான்.


ருதுபர்ணன் நளனைப் பாகனாக நடத்தியதற்காக மன்னிப்புக் கோரினான். நளன் அவனைப் பாராட்டி நட்பு பூண்டு அவனுக்கு அசுவ சாஸ்திரத்தைக் கற்பித்தான். பின் சிறு படையுடன் நிஷத தேசம் சென்று புஷ்கரனை சூதாட அழைத்தான். இம்முறை தமயந்தியே பந்தயமாக வைக்கப் பட்டாள். புஷ்கரன் தோற்றான். செல்வம், நாடு யாவற்றையும் இழந்தான். ஆயினும் நளன் அவனை மன்னித்து அவனுடைய பழைய ஊரை அளித்து அனுப்பிவிட்டான். நளன் வேள்விகளும் தானங்களும் செய்து அனைவராலும் போற்றப்பட்டு வாழ்ந்தான்.

பிருகதசுவ முனிவர் நளனின் சரித்திரத்தை காட்டிற்குச் சென்று மன வாட்டமடைந்த யுதிஷ்டிரன் தேறும்படிக் கூறினார். தமயந்தியுடன் கூடிய நளனின் பெருமையை யுதிஷ்டிரன் வியந்து போற்றினான்.

(தொடரும்)

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



**குருர் பிரம்மா குருர் விஷ்ணுகுரூர் தேவோ மகேஸ்வரஹ: ।**
**குரு சாக்ஷாத் பரம் பிரம்மா தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ: ।।**
**சரிகமபதநீத ராம் தாம்।। நமாமி சிவா காந்தாம்।।**

South Zone Culture சென்டருடைய, இந்த முக்கிய அலுவலகத்திலே, 'சாதனா' என்கிற இந்த புதிய அமைப்பின் துவக்கம் நடைபெற்று இருக்கிறது. இந்தியா முழுவதும் ஒரே கலாசாரத்தையுடைய நாடு. இந்தக் கலாசாரத்தை, காப்பதற்காகவும், பரப்புவதற்காகவும், இந்தக் கலாசாரத்துறையிலே, மேலும் ஆராய்ச்சி நிலை மேற்கொள்வதற்க்காகவும் பாரத் சர்க்காருடைய, இந்திய அரசாங்கத்தின், கலாசாரத்துறை சார்பாக பல பகுதிகளிலே, லக்னோ, கல்கத்தா, மும்பை, ஜம்மு, சென்னை, போன்ற பல பகுதிகளிலே, அந்தந்த பிராந்தியங்களை மையமாக வைத்து, இந்தக் கலாச்சார அமைப்பு துவக்கப் பட்டிருக்கிறது.

இந்தக் கலாசாரத்தை, பல்வேறு மொழிகள், பல்வேறு விதமாக, உச்சரிப்புகள், accent-பல்வேறு விதமான உச்சரிப்புகள், பல்வேறு விதமான நம்பிக்கைகள், இப்படிப் பல இருந்தாலும் கலாச்சாரம் என்பது கன்யாகுமரி முதல் காஷ்மீர் வரையிலும், ஒரே கலாசாரத்தையுடைய தேசமாக, காலம் காலமாக இந்த கலாசாரப் பரம்பரை இருந்து வருகிறது. நம்முடைய பக்கத்து நாடான நேபாளத்திலேயும் அந்த உயர்ந்த கலாச்சாரம் நல்ல முறையிலே பாதுகாக்கப்பட்டு வருகிறது,

அந்தக் கலாசாரம் என்பது உலக அமைதிக்காக பாதுகாக்கப்பட வேண்டும். இறைவனுடைய படைப்பிலே பல்வேறு அதிசயங்கள் இருக்கின்றன. இடங்களிலே, விதமான, நல்ல மனிதர்களையும், விதமான கலாச்சாரத்தையும் இறைவனுடைய படைப்பிலே நாம் பார்க்க முடிகிறது. அந்த கலாச்சாரத்தை புரிந்து கொள்ள வேண்டிய திறமையும், புரிந்து பல பல நல்ல கொள்வதற்கான ஆர்வமும், சேர்ந்து பணி புரிவதற்கான பக்குவமான மன நிலையும், நல்லது எங்கிருந்தாலும் அதைக் கிரகித்துக்

கொள்ளக் கூடிய நல்ல மனமும், கலாச்சாரத்தின் வளர்ச்சியினால்தான் கிடைக்கும். உயர்ந்த கலாச்சாரம் இருக்கும் போது தான், உயர்ந்த மனோநிலை இருக்கும் போது தான், இந்தக் கலாசாரத்தை, தனி மனிதர்களுடைய விருப்பு, வெறுப்புகளைத் தாண்டி, இந்தக் கலாச்சாரத்தைப் பாதுகாக்கக் கூடிய அக்கறை ஏற்படுகிறது. இந்தக் கலாச்சாரங்களை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக, நம்முடைய இரண்டு பெரியவர்களும், புதுக்கோட்டையை அடுத்த, இளையாத்தன்குடி என்கிற ஊரிலே, அந்தக் காலத்திலே, 'வியாச பாரத கலாதி வித்வத் சதஸ்' என்பதாக ஒரு சதஸினை நடத்தி ஆகமங்களைப் பாதுகாக்க வேண்டும், சிற்பத்தை பாதுகாக்க வேண்டும், கிராமியக் கலைகளைப் பாதுகாக்க வேண்டும், நாதஸ்வரம் போன்ற சங்கீதத்தை, பொது மக்களிடத்திலே கொண்டு செல்லக் கூடிய கலைகளைப் பாதுகாக்க வேண்டும், என்று மிகப் பெரிய விழாவினை நடத்தினார்கள்.

பழைய காலத்திலே, ஒரு விசேஷ நாதஸ்வரம், மடத்திலே கும்பகோணத்திலே இருந்தது, அந்தக் காலத்திலே. சின்ன அளவிலான நாதஸ்வரம் இருந்தது. இப்படி அனைத்துக் கலைகளையும், அறுபத்திநான்கு கலைகளையும் பாதுகாக்க வேண்டும். கலைகளை பாதுகாக்க வேண்டும். கலைஞர்களை போஷிக்க வேண்டும் என்கிற உத்தேசத்தோடு, இளையாத்தன்குடியிலேயும் பின்பு நாராயணபுரம் என்கிற மதுரையை அடுத்த ஊரிலேயும், ஸ்ரீகாளஹஸ்தியிலும், விஜயவாடாவிலேயும், செகந்திராபாத்திலும், இப்படி பல ஊர்களிலேயும் இந்த சதஸினை நடத்தி, அனைத்து கலைகளையும் ஊக்குவித்தார்கள்.

கலாச்சாரம் என்பதிலே கலையும் ஒன்று. கலாச்சாரம் என்பது சக்தி, மனதுடைய நல்ல நிலை, கூட்டு முயற்சி எல்லாம் சேர்ந்தது கலாச்சாரம். அந்தக் கலாச்சாரம் இந்தியாவைத் தாண்டி கம்போடியா, வியட்நாம், லாவோஸ், இன்னும் பல இடத்திலேயும் நம்முடைய கலாசாரத்தை நாம் பார்க்க முடிகிறது.

காஞ்சிபுரம் என்கிற வார்த்தை, கல்வெட்டிலே கம்போடியவிலே இருக்கிறது. ''ஆ காஞ்சிபுர ரூப' என்பதாக காஞ்சிபுரத்தின் அரசரைப் பற்றிய குறிப்பு அங்கே இருக்கிறது.

**ஏனா தீதானி சாஸ்திரானி பகவத் சங்கராத் வயாத்**
**விஷேச சூரி ஊர்தானி பாலா லீலா ஜாடி பங்கஜாத்**

பகவான் சங்கரர் என்கிறவரிடமிருந்து பல்வேறு சாஸ்திரங்களைக் கற்றுக் கொண்டேன் என்பதாகக் அந்தக் கம்போடியா கல்வெட்டில் காணப்படுகிறது. இப்படி சாஸ்திரங்களை எல்லாம் பரப்பிய, இங்கிருந்து பரப்பிய பெருமை, இந்த ஊருக்கு,

இந்தத் தென்னாட்டுக்கு அமைந்து இருக்கிறது. எங்கு கம்போடியில் இருக்கிறது? எங்கு கடாரம் இருக்கிறது? கடாராம் மலேசியாவில் எங்கு இருக்கிறது? எங்கு இந்தோனேசியா இருக்கிறது? அங்கு பாஷா (Bahasa) என்ற மொழி பேசப் படுகிறது. அந்த மொழிக்கு பெயரே பாஷா என்று பெயர். துவா, லிகா, மிமா, அன்னம் இது போன்ற வார்த்தைகள் அவர்கள் உபயோகப்படுத்துகிறார்கள். த்ரிகம் என்று நாம் சொல்வதை, இவர்கள் 'த்ரிகா' என்று சொல்கிறார்கள். இப்படியாக மொழியுடன், சமஸ்க்ருத பாஷையுடன் ஒரு தொடர்பு. நம்பிக்கை சார்ந்த-அங்கு ராமாயணம், மகாபாரதம் போன்ற கதைகளை இன்றைக்கும் அங்கு நாட்டிய நாடகமாக, அந்த இந்தோநேசியா, ஜாவா, சுமித்திரா, பாலி போன்ற இடங்களிலே, இன்றைக்கும் அதை நடத்திக் காட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

மொழி வேறு. அவர்களுடைய சமயம் சார்ந்த நம்பிக்கைகள் வேறாக இருந்தாலும், கலாச்சாரம் என்பது, இந்தியாவினுடைய கலாச்சாரம் என்பது, தேசங்களையும் கடந்து, மொழிகளையும் கடந்து, இந்தக் கலாச்சாரம் பரவி இருந்திருக்கிறது. இப்பொழுதும், ஒவ்வொரு இடத்தில் ஞாபகத்துடன், அந்தக் கலாச்சாரத்தை, நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

உலகத்திற்கே கலாச்சாரத்தை பிரசாரம் செய்த பூமியாக ஒரு காலத்திலே இந்த பாரத தேசம் இருந்து இருக்கிறது. மெக்ஸிகோ, இன்னும் பல இடங்களிலே இரண்டாயிரம் வருஷத்திற்கு முன்பாக இருந்த மலைவாழ் மக்களுடைய, கலாச்சாரத்தை பார்க்கும் போது, நம்பிக்கைகள், நம்முடைய கலாச்சாரத்துடன் ஒத்துப் போகக்கூடிய நம்பிக்கைகளாக தொடர்ந்து வருகின்றன.

இப்படி ஒரு புராதனமான கலாச்சாரத்தை உடைய தேசத்திலே, அந்தக் கலாசாரத்தை ஞாபகப்படுத்தக் கூடிய இடங்களாக கோவில்கள் விளங்கி வருகின்றன. அந்தக் கோவில்களை மையமாக வைத்து இத்தனைக் கலைகளையும் வைத்து இருக்கிறார்கள், கட்டிடக் கலை வளர்ந்து இருக்கிறது. சங்கீதம் வளர்ந்து இருக்கிறது. கைத்தொழில்களிலே பூக்கட்டுதல் போன்ற பல கைத்தொழில்கள் வளர்ந்து இருக்கின்றன. நாட்டிய சாஸ்திரம் வளர்ந்து இருக்கின்றது. யோக சாஸ்திரம் வளர்ந்து இருக்கிறது. சாகித்தியம், சாஸ்திரம், இலக்கியங்கள் வளர்ந்து இருக்கின்றன. பாட்டு எழுதுவதிலேயும், ரத பந்தம் போன்ற வ்ரத்தங்கள், எப்படி உங்களுக்கு ராகங்களோ, அதே போன்று, இலக்கியத்திலே அந்த வ்ரத்தங்கள், சந்தஸ் (மீட்டர்) இவைகள் எல்லாம். அதாவது, வேதத்தை எப்படித் துல்லியமாக கணக்குப் போடுவது-மாத்திராக் காலம், சங்கீதத்தில் இன்னும் முக்கியம். அதே போன்று வேதங்களிலேயும், மாத்ரிகைகள்- ஏக மாத்ரிகைகள் என்றெல்லாம் சொல்லி, இடைவெளி வரும்

உச்சரிப்புக்கும், இன்னொரு உச்சரிப்புக்கும் நடுவே வரும் இடைப்பட்டு வரும் உச்சரிப்புக் காலம் அரை நொடியா, ஒரு நொடியா, இரண்டு நொடிகளா-இதெல்லாம் கணக்கு செய்யப்பட்டு, அதற்காக லக்ஷணம் என்பதாக, வர்ணக்கரமம் அதாவது எழுத்துக்களை உடைய விவரங்களை-அந்த எழுத்துக்கள் எங்கிருந்து உருவாகின்றன உச்சரிக்கும் முறை எங்கிருந்து உருவாகிறது, பரா, பஷ்யந்தி, மத்யமா, வைகரி, என்பதாக, அதாவது நாபியிலிருந்து கண்ட ரசமாக- பாட்டை நீங்கள் எதைச் சொல்கிறீர்களோ-நாபி, கண்ட ரசனா-இந்த நான்கு நிலையிலே பரா, பஷ்யந்தி, மத்யமா, வைகரி- என்பதாக அந்த சப்த உச்சாரத்திற்கான கிரமங்கள், இந்தத் த்வனி-த்வனி சாஸ்திரம் என்பது இப்படிப் பார்க்கப்பட்டு, ''நாத தனு மனுஷம்'' என்பதாக நாதோபாசனை நடைபெற்று வந்திருக்கிறது.

அந்தக் கலாச்சாரத்தை, கலாச்சாரத்தினுடைய முக்கியத்துவத்தை நாம் இன்றைக்கு தெரிந்து கொள்ள வேண்டிய நிலையிலே இருக்கிறோம் இதெல்லாம் பழமையானவை. அதனால் இன்றைக்கு உபயோகப்படுமா என்று தெரியவில்லை, என்பதாக தீர்மானித்துக் கொள்ளாத, கருத்து. நல்ல அறிய கருத்துக்களையும் நாம் தெரிந்து கொள்ள முடியாத நிலையிலே, கொஞ்ச நேரம் கழித்து, கொஞ்ச காலம் கழித்து, நாம் நல்ல விஷயங்களை தெரிந்து கொள்ளாமல் விட்டு விட்டோமே என்கிற ஒரு ஆதங்கத்துடன் பலரும் இந்த கலைகளின் மீது ஆர்வம் எடுத்துக் கொண்டு, தேடல் என்று சொல்கிறார்களே, அது போன்று அனுவேஷனம் தேடத் தொடங்கி இருக்கிறார்கள். இது ஒரு நல்ல அறிகுறி.

கிழக்கு, மேற்கு understanding, East&West understanding என்று சொல்கிறார்கள். கிழக்கத்திய தேசங்களும், மேற்க்கத்திய தேசங்களும் புரிந்து கொள்ளுதல், ஏனென்றால், ஜனத்தொகை அதிகமாகக் கொண்ட வெவ்வேறு பாஷைகளைக் கொண்ட வெவ்வேறு நம்பிக்கைகளைக் கொண்ட தேசம் இந்தப் பக்கம் இருக்கிறது, ஆசியாவிலே. அதுவும் மிகப்பெரிய ஜனத்தொகை கொண்ட பக்கத்து நாடும் இருக்கிறது. மொத்தத்திலே, ஜனத்தொகை அதிகமாகக் கொண்ட நாடுகள் இந்தப் பக்கம் இருக்கின்றன. வசதியான, சௌகரியமான, வெவ்வேறு விதமான திறமை வாய்ந்த மேற்க்கத்திய நாடுகள் இருக்கின்றன. நிர்வாகத்திலே முக்கிய இடத்தைப் பிடித்த மேலைநாடுகளும் இருக்கின்றன.

இன்னொரு பக்கம் கலாச்சாரத்தை வளர்க்க வேண்டிய நிலையிலே இன்னும் பல பிரதேசங்கள் இருக்கின்றன. இப்படி இருக்கும் போது சமநிலை என்பது பார்க்கமுடியாதா நிலை இருக்கும் போது, இந்தக் கலாச்சாரத்தை பாதுகாப்பதன் மூலமாக, இந்த மக்களைப் பாதுகாக்க முடியும் இந்த கலாச்சாரத்தை பாதுகாப்பதன்

மூலமாக மேலைநாடுகளுடைய நல்ல அபிப்ராயத்தையும் நாம் பெற முடியும். வளர்ச்சி அடைய வேண்டிய பகுதிகளையும், கலாச்சாரத்துரையிலே வளர்ச்சி அடைய வேண்டிய பலத்துறைகளிலேயும் நாடுகளிலேயும் நாம் சேவை செய்ய முடியும். மொத்தத்திலே இந்தியக் கலாச்சாரம் வளர்வது என்பது இந்தியாவிற்கும் நல்லது, உலக அமைதிக்கும் (இந்தக் கலாச்சாரம் என்பது) நல்லது. கலாச்சாரம் என்பது இசைக் கருவிகளோடு, கட்டிடக் கலையோடு நின்று விடுவதில்லை. உபதேசங்களும் அதிலே இருக்கின்றன.

வேதங்களுடைய உபதேசங்கள் ஒரு உயர்ந்த கலாச்சாரத்தை- த்யாகம் தான் முக்கியம் இந்த உலகத்திலே. பணம், காசு, பதவி, பட்டம் எல்லாம் இருந்தாலும், பக்தியும், தியாகமும் சேவையும் தான் முக்கியம் என்பதை இந்த வேதத்தின் உபதேசங்கள், நம்முடைய பாமர மக்களின் மனது வரையிலே பதிய வைத்து, அவர்கள் தத்துவ வார்த்தைகளைத் தெரிந்து கொண்டு இருக்கிறார்களோ, இல்லையோ தத்துவங்களைத் தெரிந்து கொண்டு இருக்கிறார்கள். இந்த தேசத்திலே இருக்கக்கூடிய குடிசையிலே வாழும் மக்கள் முதற் கொண்டு அனைவரும், வாழ்க்கை என்பது, மனித வாழ்க்கை என்பது எதற்காக ஏற்ப்பட்டது, இந்த மனித வாழ்க்கையிலே நாம் சாதனையாக நாம் எதைக் கருத வேண்டும், என்பதை அறிந்தே இருக்கிறீகள்.

இங்கே நீங்கள் ‘சாதனா‘ என்ற பெயர் போட்ருக்கா. சாதனைகளாக நாம் கருத்தில் கொள்ள வேண்டியது என்ன? ஒரு கோப்பையைப் பெறுவது, ஒரு சால்வையைப் பெறுவது, ஒரு சன்மானம் பெறுவது, ஒரு விருதுகளைப் பெறுவது என்பதும் சாதனை என்பதிலே சந்தேகம் இல்லை. இருந்தாலும், அதையும் தாண்டி மனத்ருப்தி, ஈஸ்வர அநுக்ரகம், சமுதாயத்திற்காக நாம் செய்ய வேண்டிய நன்றிக் கடன், சமுதாயத்திற்காக நாம் திருப்பி செலுத்த வேண்டிய பிரதிபலன், என்றெல்லாம் நாம் யோசிக்கும் பொழுது, இந்தக் கலாச்சாரத்தை பாதுகாப்பதுதான், நாம் அனைவரும் செய்யக் கூடிய மரியாதையாக, பரம்பரைக்கும் செய்யக் கூடிய உதவியாக, பொது அமைதிக்கு செய்யக் கூடிய உபகாரமாக, அதாவது தனி மனித அமைதி என்பது ஒன்று; ஊரிலே அமைதி, நாட்டிலே அமைதி, சௌஜன்யமான நிலைமை சிசுர் வேத்தி, பசுர் வேத்தி, வேத்தி கான ரசம் பணி: - இந்த சப்த சாஸ்திரத்தினுடைய பலனாக குழந்தைகளும் இதனை ரசிக்கிறார்கள். பசு போன்ற ஜந்துக்களும் ரசிக்கின்றன. பாம்பு போன்ற ஜீவராசிகளும் கட்டுப் படுகின்றன.

(தொடரும்)

# ப்ரபோத சிந்தாமணி

ஆயுஷ்மன்

‘‘நான் சமீபத்தில் விமானப் பயணம் செய்த போது சில ஸ்த்ரீ உபாத்யாயினிகள் ஆங்காங்கே கிழிந்த ஜீன்ஸ் அணிந்து வந்திருந்தனர். எனக்கு அதிர்ச்சி. பிள்ளைகளுக்குப் பாடம் போதிக்கும் ஸ்தானத்தில் இருப்பவர்கள் இம்மாதிரி உடை அணிவது தவறானது. இதை வன்மையாகக் கண்டிக்கிறேன்’

**உத்ரகண்ட் முதல்வர் ராவத்**

இப்படி ஒரு செய்தி பத்திரிகைகளில் வந்தது. இது போலவே இன்னொரு செய்தி பீகார் மக்களவையில் டீ ஷர்ட் அணிந்து வந்த உறுப்பினர் சபா நாயகரால் கண்டிக்கப்பட்டார்.

இம்மாதிரி நிகழ்ச்சிகள் பொறுப்பான ஸ்தானத்திலிருப்பவர்கள் தங்கள் பொறுப்பை உணராமல் தாந்தோன்றித்தனமாக நடந்து கொள்வது அதிகமாக உள்ளது. காரணம் கட்டுப்பாடின்மை,மேற்கத்திய கலாசார தாக்கம். அவர் சொன்னதற்கு மிகப்பெரிய கண்டனம் எழும்பியது. உடை அணிவது அவரவர் விருப்பம். இதை எதிர்ப்பது தனிமனித உரிமை மீறல் என்று கூக்குரல். பல வருடங்களுக்கு முன் பாடகர் ஜேசுதாஸ் இதுபோல சொல்ல அவருக்கும் கண்டனம்.

நமது கலாசாரத்தில் ஒவ்வொருவருக்கும் அவரவர் செய்யும் வேலையைப் பொறுத்து ஆடைகள் விதிக்கப்பட்டுள்ளன. யாருடைய உரிமையையும் மீறாமல் விதிக்கப்பட்டுள்ளன. ஒரு வஸ்த்ரம் என்பது தேவர்கள் நமக்கு அளிக்கும் ப்ரசாதம். அதை நன்றாகப் பயன்படுத்துவது நம் கடமை. வீட்டில் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். அவையில் சில கட்டுப்பாடுகளுடன் தான் இருக்க வேண்டும். முக்யமாகப் பெண்கள் அதி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இப்போது நடக்கும் பல நிகழ்ச்சிகள் அவர்களுடைய அஜாக்கிரதையினாலும் மனம் போனபடி ஆடை அணிவதாலும் தான் என்பதை நாடே அறியும். இதற்கு எதிர்ப்பு எல்லாம் கண் துடைப்பே. எவ்வளவோ அக்ரமம் செய்தாலும் அரசியல்வாதிகளைப் போல் உடை அணிவதை நாம் பின்பற்றலாம். (வெள்ளை வேட்டி வெள்ளை சொக்காய்)ஆடைபாதி மனிதன் பாதி என்பது போல் தக்க சமயத்தில் சரியான ஆடைகளை அணிவது மதிப்பைக் கூட்டும். இங்கே இதை வலியுறுத்தும் ஒரு ஸுபாஷிதத்தைப் பார்போம்.

*''வாஸஸா கிம் ந விசாரணீயம் வாஸஸைவ யோக்யதாயா:*
*பீதாம்பரம் வீக்ஷ்ய ஸ்வகன்யாம் ததௌசர்மாம்பரம் வீக்ஷ்ய விஷம் ஸமுத்ர:''*

*உடையில் என்ன உள்ளது என்று எண்ண வேண்டாம். ஒருவனுக்கு யோக்யதையைத் தருவது உடைதான். பாருங்கள் பீதாம்பரம் அணிந்த விஷ்ணுவிற்கு தன் பெண்ணையும் தோலாடை அணிந்த சிவனுக்கு விஷத்தையும் ஸமுத்ரம் தந்தது''*

*நல்ல ஆடைகளை அணிவதில் என்ன தயக்கம்? நமக்கு மதிப்பு கூட நல்ல ஆடைகளை அணிவது அவஸ்யம். இதை எப்போது தெரிந்து கொள்வார்களோ? அப்போது ப்ரபோதம் வரும்?*

(தொடரும்)

# வருந்துகிறோம்



காலடி விஸ்வநாதன் என்று அழைக்கப்பட்ட **ஸ்ரீ V.விஸ்வநாத ஐயர்** 09.04.2021 அன்று சிவலோக ப்ராப்தி அடைந்தார். ஸ்ரீ விஸ்வநாத ஐயர் அவர்கள் 2013ம் ஆண்டு ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளால் ஸ்ரீமடத்தின் ஸ்ரீகார்யம் ஏஜண்டாக நியமிக்கப்பட்டார். மீண்டும் தொடர்ச்சியாக ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்த்ர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளால் 2018ம் ஆண்டு ஸ்ரீமடத்தின் ஸ்ரீகார்யம் ஏஜண்டாக நியமிக்கப்பட்டார். முன்னதாக ஸ்ரீமடத்தின் காலடி மற்றும் கும்பகோணம் கிளைகளில் மேலாளராக பணிபுரிந்திருக்கிறார். மிகவும் ஸாத்வீக குணமும் ஸ்ரீ பெரியவாள் அவர்களின் பேரில் அதி தீவிர பக்தியும் கொண்டவர். மிகவும் எளிமையான வாழ்க்கை முறையும், நேர்மையான அணுகுமுறையும் கொண்டவர்.

அன்னாரது குடும்பத்திற்கு எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொண்டு அவரது ஆத்மா சாந்தியடைய ப்ரார்த்திக்கிறோம்.

# பீஷ்மஸ்தவராஜம் - 4

*வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்*

य : सहस्रसमे सत्रे जन्ये विश्वसृजाम् ऋषि ।
हिरण्यपक्ष: शकुनिस्थस्मै हम्सात्मने नम: ।। २६

**ய: ஸஹஸ்ரஸமே ஸத்ரே ஜக்யே விஸ்வஸ்ருஜாம் ரிஷி:**
**ஹிரண்யபக்ஷ:ஸகுனிஸ்தஸ்மை ஹம்ஸாத்மனே நம: || 26**

*எவன் ப்ரம்மாவின் ஆயிரம் வேள்வியின் பயனாக பொன்மயமான சிறகுகளை உடைய அன்னப் பறவையாய் அவதரித்தானோ அந்த பரமஹம்ஸமானவனுக்கு நமஸ்காரம்.*

शुक्ले देवान् पित्रून् क्रुष्णे तर्पयत् अम्रुतेन य: ।
यस्च राजा द्विजातीनाम् तस्मै सोमात्मने नम: ।। २७

**சுக்லே தேவான் பித்ரூன் க்ருஷ்ணே தர்பயத் அம்ருதேன ய:**
**யச்ச ராஜா ட்விஜாதீனாம் தஸ்மை சோமாத்மனே நம: || 27**

*சுக்லபக்ஷத்தில் தேவர்களையும், க்ருஷ்ண பக்ஷத்தில் பித்ருக்களையும் தன் அமுத கிரணங்களால் மகிழ்விக்கும் அந்தணர்களின் ராஜாவான அந்த சோமன் என்னும் பகவானுக்கு நமஸ்காரம்.*

हुताशनमुखै: देवै: धार्यते सकलम् जगत् ।
हवि: प्रथम भोक्ता यस्तस्मै होत्रात्मने नम: ।। २८

**ஹுதாஸனமுகை: தேவை: தார்யதே ஸகலம் ஜகத்**
**ஹவி:ப்ரதமபோக்தா யஸ்தஸ்மை ஹோத்ராத்மனே நம: || 28**

*பெருமானின் அக்னி முகத்தால் இவ்வுலகம் அனைத்தையும் தாங்குகிறான். தனக்கு அளிக்கப்படும் ஆவியை ஏற்று தேவர்களுக்கு அளிக்கிறான். அப்பேர்ப்பட்ட அக்னிஹோத்ர பகவானுக்கு நமஸ்காரம்.*

महत: तमस: पारे पुरुषम् ह्यति तेजसम् ।
यम् ग्यात्वा म्रुत्युम् अत्येति तस्मै ग्येयात्मने नम: ।। २९

**மஹத: தமஸ: பாரே புருஷம் ஹ்யதி தேஜஸம்**
**யம் க்யாத்வா ம்ருத்யும் அத்யேதி தஸ்மை க்யேயாத்மனே நம: || 29**

*அறியாமை என்னும் பேரிருளைக் கடந்து அதிக ஒளிமிக்க ஞான வடிவான எம்பெருமானை அறிந்து ம்ருத்யுவைக் கடக்க துணை நிற்கும் ஞான ஸ்வரூபிக்கு நமஸ்காரம்.*

यम् ब्रुहन्तम् ब्रुहत्युक्ते यमग्रे यम् महाध्वरे ।
यम् विप्रसन्गा गायन्ति तस्मै वेदात्मने नम: ।। ३०

**யம் ப்ருஹந்தம் ப்ருஹத்யுக்தே யமக்னே யம் மஹாத்வரே**
**யம் விப்ரஸங்கா காயந்தி தஸ்மை வேதாத்மனே நம: || 30**

*பெரிய யாகங்களில் அக்னியில் ஹோமம் செய்யும்போது அந்தணர் கூட்டம் வேதகோஷத்தால் செய்கிற அந்த வேதத்தை ஆத்மாவாகக் கொண்டவனுக்கு நமஸ்காரம்.*

ऋग्यजु: सामात्मानम् दसार्थ हविरात्मकम्
यम् सप्ततन्तुम् तन्वन्ति त्स्तै यग्यात्मने नम: ।। ३१

**ருக்யஜுுச்ஸாமதாமானாம் தசார்த்த ஹவிராத்மகம்**
**யம் ஸப்த தந்தும் தன்வந்தி தஸ்மை ய்ஞ்யாத்மனே நம: || 31**

*ருக், யஜுஸ், ஸாம வேத நிலையமாய் ஐந்து முகமாய் ஹவிர்பாகமாகி ஏழு நாக்குகளால் ஏற்றுக் கொள்கிறானோ அந்த யஞ்யாத்மாவுக்கு நமஸ்காரம்.*

चतुर्भिस्च चतुर्भिश्च द्वाभ्याम् पनचभिरेव च
हूयते च पिनर्द्वाभ्याम् तस्मै होमात्मने नम: ।। ३२

**சதுர்பிச்ச சதுர்பிச்ச த்வாப்யாம் பஞ்சபிரேவ ச**
**ஹூயதே ச புனர்த்வாப்யாம் தஸ்மை ஹோமாத்மனே நம: || 32**

*ஹோம மந்த்ரங்களான ஆஸ்ராவய, அஸ்து, ஸ்ரௌஷட், யஜ் யே, யஜாமஹே வஷட் ஆகிய ஐந்து மந்த்ரங்களால் செய்யப்படும் ஹோமவடிவமானவனுக்கு நமஸ்காரம்.*

*(தொடரும்)*

# ஸ்ரீமத் தேவி பாகவதம் -13

பி. ஆர். கண்ணன்



**ஸ்கந்தம் 6**

**வ்ருத்ர வதம்**

த்வஷ்டா என்ற ப்ரஜாபதியானவர் ஒரு சமயம் தேவேந்திரனிடம் மிகுந்த த்வேஷம் கொண்டு, ஒரு புத்ரனை உண்டாக்கி, விஸ்வரூபன் என்று பெயரிட்டார். விஸ்வரூபனுக்கு மூன்று தலைகள்- த்ரிசிரஸ்; வேதவித்தாகத் திகழ்ந்தார். **வேதாநேகேந ஸோதீதே ஸுராம் சைகேந ஸோபிபத் । த்ருதீயேந திஸபு: ஸர்வா யுகபச்ச நிரீக்ஷதே ।।** ஒரு முகத்தினால் வேதம் ஓதுவதும், வேறொரு முகத்தினால் ஸுராபானமும், மூன்றாவது முகத்தினால் எல்லா திசைகளையும் பார்ப்பதும் அவருக்கு வழக்கமாக இருந்தது. இந்திரனை எதிர்க்க சக்தி வேண்டி, கடும் தபஸ் மேற்கொண்டார். கோடையில் பஞ்சாக்னி (நான்கு புறமும் அக்னி, மேலே சூரியன்), குளிரில் ஜலமத்தியில் தபஸ் செய்தார். இந்திரன் பயந்துபோய் அப்ஸர ஸ்த்ரீகளை ஏவினார். **நாபஸ்யத்ஸ தபோராஸிரங்கநாநாம் விடம்பநம் । இந்த்ரியாணி வஸே க்ருத்வா மூகாந்தபதிர: ஸ்தித: ।।** தபஸில் ஆழ்ந்திருந்த விஸ்வரூபன், அந்த ஸ்த்ரீகளின் மோகமளிக்கும் லீலாவிநோதங்களை கண்ணெடுத்தும் பார்க்காமல், ஊமை, குருடு, செவிடு போல் இருந்தார். ஸ்த்ரீகள் திரும்பினர். இந்திரன் இப்போது, தானே நேரில் வந்து, ஸமாதியில் இருந்த தபஸ்வியை வஜ்ராயுதத்தினால் தாக்கி வதம் செய்தார். புத்ரவதத்தைப்பற்றி அறிந்த த்வஷ்டா, அதர்வண மந்திரங்களால் எட்டு நாட்கள் ஹோமம் செய்து புத்ரோத்பத்திக்காகப் பிரார்த்தித்தார். ஆனால் ஒரு பெரிய தவற்றினை செய்துவிட்டார். **இந்த்ரஸத்ரோ விவர்தஸ்வ** என்கிற மந்திரத்தின் உச்சாரணத்தில், 'இந்திரனுக்கு சத்ரு வளரட்டும்' என்பதற்குப் பதிலாக, ஸ்வரபேதக் காரணமாக, 'இந்த்ரன் சத்ருவைவிட வளரட்டும்' என்கிற தாத்பர்யம் தொனித்துவிட்டது. (வேதமந்த்ர உச்சாரணத்தில் ஸ்வரம் எவ்வளவு முக்கியம் என்பதைக்காட்டுமுகமாக இந்த நிகழ்ச்சியை சாஸ்த்ரங்கள்

எடுத்துரைக்கின்றன. சரியான ஸ்வரத்தை குருமுகமாகக் கற்றுத்தான் வேதம் ஓதுதல் வேண்டும்.) புத்திரன் அக்னியிலிருந்து உண்டாகி, பிறந்தவுடனேயே, பர்வதாகாரமாக வளர்ந்தான். **வ்ருஜிநாத் த்ராயதே இதி வ்ருத்ர:** 'துக்கத்திலிருந்து காப்பதால் வ்ருத்ரன்' என்று பெயரிட்டார் த்வஷ்டா. (ஸ்ரீமத் பாகவதத்தில், **லோகாந் ஆவ்ருத்ய த்ராஸயதே இதி வ்ருத்ர:** 'உலகங்களைச் சூழ்ந்துகொண்டு அச்சுறுத்துவதால் வ்ருத்ரன்' என்று பெயரிட்டதாக வருகிறது.) பல ஆயுதங்களைக் கொடுத்து, இந்திரனை வதம் செய்யச் சொன்னார் அவர். வ்ருத்ரன் தேவலோகத்தில் படையெடுத்தான். இந்த்ரன் குரு ப்ருஹஸ்பதியிடம் ஆலோசனை கேட்கவே, குரு, விஸ்வரூபனை இந்திரன் வதம் செய்து மிகப்பெரிய பாபம் செய்ததை எடுத்துக் கூறினார். அத்யுக்ரபுண்யபாபாநாம் பலம் பவதி ஸத்வரம் 'மிகக்கடுமையான புண்யம், பாபம் இவற்றிற்கு உடனேயே பலன் கிடைத்துவிடும்' என்றார். சாதாரண புண்ய பாபங்கள் அடுத்த ஜன்மாக்களிலேயே பலன் கொடுப்பவை.

வ்ருத்ர-இந்த்ர யுத்தம் கடுமையாக 100 வருஷங்கள் தொடர்ந்தது. எல்லாதேவர்களும் ஓட்டமெடுக்கவே, இந்திரவாகனமாகிய ஐராவதயானையுடன் வ்ருத்ரன் திரும்பினான். த்வஷ்டாவிடம், யுத்தபூமியிலிருந்து பயந்து ஓடினவர்களைத் தாக்க இஷ்டப்படவில்லை என்று வ்ருத்ரன் கூறவே, த்வஷ்டா வருந்தி, கடும் தபஸ் செய்யுமாறு அவனிடம் சொன்னார். 100 வருஷங்கள் கடும் தபஸ் செய்து, பிரம்மாவிடமிருந்து அரிய வரன் பெற்றான் வ்ருத்ரன். காய்ந்த, ஈரமான, கல்லினாலான, மரத்தினாலான எந்த ஆயுதத்தினாலும் மரணமின்மையே அவ்வரம். இப்போது, த்வஷ்டா வ்ருத்ரனை இந்த்ரவதத்திற்கு ஊக்கினார். ஒரு புத்திரனுடைய கடமையை மிக அழகாக எடுத்துக்கூறினார். பிரசித்தமான ஸ்லோகம் இது; கருட புராணம் முதலிய பல சாஸ்திரநூல்களிலும் சொல்லப்பட்டது. **ஜீவதோ வாக்யகரணாத் க்ஷயாஹே பூரிபோஜநாத் । கயாயாம் பிண்டதாநாச்ச த்ரிபி: புத்ரஸ்ய புத்ரதா ।।** ஒரு புத்ரன் ஸத்புத்ரன் என்று பெயர் பெறுவதற்கு, மூன்று காரியங்களை அவன் அவசியம் செய்யவேண்டும் - மாதா, பிதா ஜீவதசையில் அவர்கள் சொற்படி நடத்தல்; அவர்கள் காலகதிக்குப்பிறகு, வருஷாவருஷம் வரும் மரணதிதியில் ச்ராத்தம் முறைப்படி செய்து, பிராம்மணர்களுக்கு போஜனம், தக்ஷிணை தாராளமாகக் கொடுத்தல்; கயை க்ஷேத்ரத்தில் ஸ்ராத்தம், பிண்டதானம் வாழ்க்கையில் ஒருதடவையாவது செய்தல் ஆகியன. வ்ருத்ரன், பிதா சொற்படியே, இந்திரனுடன் கடும் யுத்தம் நடத்தினான். ஒரு சமயத்தில், இந்திரனை வாயில் போட்டு விழுங்கிவிட்டான். தேவர்கள் முதன்முறையாகக் கொட்டாவியை ஸ்ருஷ்டிக்கவே, வ்ருத்ரன் கொட்டாவி விட, இந்த்ரன் குதித்து வெளியில் வந்தார். 10000 வருஷங்கள் நடந்த கடும் யுத்தத்தில் இந்த்ரன் தோற்று ஓடவே, வ்ருத்ரன் பிதா த்வஷ்டாவுடன் தேவலோக பட்டணமாகிய அமராவதியில் அமர்ந்து போகங்களை அனுபவித்தான்.

வெகுகாலம் சென்றபின், விஷ்ணுவின் யோசனைப்படி, இந்த்ரன் தேவியை உபாஸித்து, சும்ப, நிசும்பர்களை வதம் செய்ததுபோல், தேவி வ்ருத்ரனை ஸம்ஹாரம் செய்து, குழந்தைகளாகிய தங்களைக் காக்கவேண்டும் என்று பிரார்த்தித்தனர். தேவி, 4 கைகள், 3 கண்கள், ரக்தவண்ண வஸ்த்ரம், ஸர்வாலங்காரபூஷிதையாய் தரிசனம் தந்து அருளினாள்.

விஷ்ணுவின் ஆலோசனைப்படி, இந்த்ரன், ரிஷிகளை வ்ருத்ரனிடம் அனுப்பி, இந்த்ரனுடன் சமாதானமே சிறந்தது என்று அவர்கள் மூலம் வலியுறுத்தினார். ரிஷிகளின் உத்தரவாதத்தை ஏற்றுக்கொண்ட வ்ருத்ரன், இந்த்ரனை பிரம்மா கொடுத்திருந்த வரம்போலவே சொல்லி அக்னிஸாக்ஷியாக சபதம் செய்யுமாறு செய்துவிட்டு, சமாதானமாகிவிட்டான். இந்த்ரன் ஸகாவைப்போல் நடித்துக்கொண்டே, வ்ருத்ரனை வதம் செய்ய தக்க சமயத்தை எதிர்பார்த்தார். ஒருநாள், ஸாயம் ஸந்தியாகாலத்தில் வ்ருத்ரன் ஸந்தியாவந்தனம் செய்துகொண்டிருக்கும்போது, இந்த்ரன் விஷ்ணுவை ஸ்மரிக்கவே, விஷ்ணு ஏற்கெனவே சொல்லியிருந்தபடி, வஜ்ராயுதத்தில் பிரவேசித்தார். தேவியை ஸ்மரிக்கவே, தேவியும் முன்னர் அனுக்ரகித்தபடி, நதிஜலத்தின் நுரையில் பிரவேசித்தாள். இந்த்ரன், வஜ்ராயுதத்தை நுரையினால் மூடி, அதனை வ்ருத்ரன்மேல் ஏவினார். வ்ருத்ரவதம் இவ்வாறு நிகழ்ந்தது. நுரை ஈரமுமில்லை, காய்ந்ததுமில்லை; அவ்வாறு பிரம்மாவின் வரம் மீறப்படவில்லை. தேவியை 'வ்ருத்ரப்ராணஹரி' என்று தேவிமாஹாத்மியத்தில் வர்ணிப்பதும் இவ்வாறே: **கிரீடிநி மஹாவஜ்ரே ஸஹஸ்ரநயநோஜ்ஜ்வலே । வ்ருத்ரப்ராணஹரே சைந்த்ரி நாராயணி நமோஸ்து தே ॥** ரிஷிகள் வ்ருத்ரனிடம் கொடுத்த தங்கள் வாக்கு பொய்த்ததற்காக வருந்தினர். த்வஷ்டா இந்த்ரனை மகத்தான துக்கத்தை அடைவான் என சபித்தார்.

இந்த்ரன் அபகீர்த்தியினாலும், தேவர்களின் அவமதிப்பினாலும், ப்ரம்மஹத்யா பயத்தினாலும் பலம் குன்றி தளர்வடைந்தார். அதனால் வெட்கத்தினால் மானஸரோவரில் ஒரு தாமரைத்தண்டில் ஒளிந்தார். இந்த்ரனில்லாமல் யாவரும் பயமடைந்தனர். எங்கு தேடியும் கிடைக்கவில்லை. மழையில்லை. அராஜகம் நிலவவே, தேவர்களும் ரிஷிகளும் நஹுஷன் என்ற பூலோக ராஜாவை இந்த்ரனாக்கினர்.

## நஹுஷன் கதை

நஹுஷன் சாஸ்த்ரங்களைக் கற்று, பூலோகத்தில் தார்மீக ராஜ்யம் நடத்தினவன். அதனால்தான் ஸப்தரிஷிகளால் இந்த்ரபதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டான். இந்த்ரபதவியில் அமர்ந்தும் கொஞ்சகாலம் தார்மீகமாகவே இருந்த அவனுக்கு ஒரு

நாள், தனித்திருந்த இந்த்ராணி இந்த்ரனாகிய தனக்கே உரியவள் என்ற எண்ணத்தில் அவளை அழைத்தான். இந்த்ராணி தேவகுரு பிருகஸ்பதியிடம் சரண் புகவே, நஹுஷன் காமம் தலைக்கேறி பிருஹஸ்பதியைக் கொன்று இந்த்ராணியை அடைவேன் என்றான். தேவர்கள் தர்மத்தை எவ்வளவோ எடுத்துக்கூறியும் அவன் காதில் விழவில்லை. பிருஹஸ்பதியின் யோசனைப்படி, இந்த்ராணி நஹுஷனிடம் சென்று, இந்த்ரன் எங்கிருக்கிறார், இருக்கிறாரா, இல்லையா என்று தீர்மானிக்க அவகாசம் தேவை என்று கூறவே, அவனும் ஒப்புக்கொண்டுவிட்டான். தேவர்கள் விஷ்ணுவிடம் பிரார்த்தித்தனர். விஷ்ணு அச்வமேத யாகம் செய்து இந்த்ரனுக்குத் தூய்மை கிடைக்கும்படியும், தேவியைப் பிரார்த்திக்கும்படியும் அருளினார். தேவர்கள் அவ்வாறே அச்வமேதயாகம் செய்தனர். ப்ரம்மஹத்தி தோஷத்தை மரங்கள், நதிகள், பர்வதங்கள், பூமி, ஸ்த்ரீகள் ஆகியோரிடம் பிரித்துக் கொடுத்து, அவர்களுக்கு தகுந்த வரன்களையும் அருளினர். இந்த்ராணி, தேவியைநோக்கி விசேஷ உபாஸனை செய்தாள். பிருஹஸ்பதியின் மந்த்ரோபதேசப்படி, தாபஸீவேஷத்துடன் அவள் இயற்றிய பூஜையினால் பிரஸன்னமான தேவியிடம், இந்த்ராணி வரன் கேட்டாள்: என் கணவரை நான் உடனே தரிசிக்கவேண்டும்; நஹுஷனுடைய பயம் விலகவேண்டும்; பழையபடி இந்த்ரபதவியில் நாங்கள் அமரவேண்டும் என்று. தேவி அனுக்ரகித்து, தூதியை அனுப்பினாள். இந்த்ராணி இந்த்ரனை மானஸரோவரில் தாமரைத்தண்டில் ஒளிந்திருந்ததைக்கண்டு மிகவும் துக்கமடைந்தாள். இந்த்ரன் சொன்னார்: **ஸீலமேவ ஹி நாரீணாம் ஸதா ரக்ஷதி பாபத:** । நன்நடத்தையே ஸ்த்ரீகளை பாபத்திலிருந்து ரக்ஷிக்கும். நீ நஹுஷனிடம் ஸாமர்த்தியமாக, உன் அந்தஸ்திற்குத்தக, ஸப்தரிஷிகளால் தூக்கப்படும் பல்லக்கில் வந்தால் நான் உன்னை ஏற்பேன் என்று சொல் என்று உபாயம் கூறினார். **ஜகதம்பாபதஸ்மர்து: ஸங்கடம் । கதாசந** । ஜகதம்பாவின் பாதங்களை ஸ்மரிப்பவற்கு சங்கடம் ஏது என்றார். அவ்வாறே, இந்த்ராணி நஹுஷனிடம் சென்று, பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோருடைய வாகனங்களைவிட உயர்ந்ததான ஸப்தரிஷிகள் தூக்கும் பல்லக்கில் வருமாறு சொன்னாள். காம மதிமயக்கத்தில் நஹுஷனும் அவ்வாறே செய்தான். பல்லக்கில் வரும்போது, தூக்கிக்கொண்டுவந்த ரிஷிகளில் ஒருவரான அகஸ்தியர் குள்ளமாக இருந்து, கொஞ்சம் மெதுவாகவும் நடந்ததினால், பல்லக்கு தடுமாற்றத்தை அடைந்ததைக்கண்டு வெகுண்டான் நஹுஷன். சீக்கிரம் போகவேண்டும் என்கிற அவசரத்தினால், அகஸ்திய முனிவரை தன் காலினால் தட்டி, 'ஸர்ப்ப, ஸர்ப்ப' என்று கத்தினான். ஸர்ப்ப என்ற பதத்திற்கு ஸம்ஸ்க்ருதத்தில், 'வேகமாகச்செல்' என்றும், பாம்பு என்றும் இரு அர்த்தங்கள் உண்டு. அகஸ்தியருக்கு ஏற்கெனவே நஹுஷனிடம் கோபம் இருந்தது. மகாபாரதத்தில் சொன்னபடி, ஒருசமயம் வேதத்தில் பசு ஸம்பந்தமான சிலவிஷயங்களைத் தான் ஒத்துக்கொள்ளாததை, அகஸ்தியர் மறுத்துக்

கூறியும் கேட்காமல் விதண்டாவாதம் பேசியிருந்தான் நஹுஷன். இப்போது, கோபத்தினால் நஹுஷனை அகஸ்தியர் 'ஸர்ப்போ பவ' (பாம்பாக ஆவாய்) என்று சபித்தார். அடுத்த நிமிஷம், நஹுஷன் ஒரு மலைப்பாம்பாக மாறி கீழே பூலோகத்தில் விழுந்தான். தர்மத்திலிருந்து சிறிதும் வழுவாதவன் என்கிற ஸ்ரேஷ்டமான பெயரை எடுத்திருந்த ராஜாவாக இருந்த நஹுஷன், சற்றும் எதிர்பாராமல் இந்த்ர பதவிக்கு உயர்ந்தான். தர்மமார்க்கத்திலிருந்து வழுவியவுடனே, ஒரு பாம்பாக மாறினான் என்றால், **தர்ம ஏவ ஹதோ ஹந்தி தர்மோ ரக்ஷதி ரக்ஷித:,** தர்மத்தை நாம் விட்டுவிட்டால் அந்த தர்மமே நம்மைத் தாக்கும்; தர்மத்தை நாம் அனுஷ்டித்தால், அந்த தர்மமே நம்மைக்காக்கும் என்ற சாஸ்திர வாக்கின் பெருமை நமக்கு சுலபமாகப் புரிந்துவிடுகிறது. அஸ்வமேத யாகத்தினாலும், பச்சாதாபத்தினாலும் தோஷத்திலிருந்து சுத்தமாகிய இந்த்ரனை வரவழைத்து பட்டாபிஷேகம் செய்தனர் தேவர்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் வ்யாஸ பகவான் ஜனமேஜயருக்கு, வஸிஷ்டரும், விஸ்வாமித்ரரும் எவ்வாறு ஒருசமயம் கோபத்தினால் ஒருவரை மற்றொருவர் சபிக்க நேர்ந்தது; பிரம்மா வந்து சண்டையைத் தீர்த்தார் என்பதையும், இக்ஷ்வாகு வம்சத்தைச் சேர்ந்த நிமி என்ற ராஜா, வஸிஷ்டர் சாபத்திற்கு ஆளாகி, பிராணனை இழந்தும், பின்னர் தேவியின் அனுக்ரகத்தினால் பரமஞானமும், ஜீவர்களின் கண்களில் இமைக்கும் வாயுவாக நிரந்தரமாக இருக்கும் வரனும் அடைந்தார் என்ற விவரங்களையெல்லாம் கூறினார்.

(வளரும்)


"ஸ்ம்ருதி முக்தாபலம்" என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.
1.வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2.ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3.ஆஹ்னிககாண்டம் உத்தரபாகம் ,
4.ஆசௌசகாண்டம், 5.ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6.ஸ்ராத்தகாண்டம் உத்தரபாகம்,
7.திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்தகாண்டமும் என்ற 7 பாகங்கள்சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப்பெறுகின்றது.ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500
கூரியர் தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்
தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்
9600543996,7904244054, 9003845456,9710765203

குறிப்பு :

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும்**
**ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# வேதோ நித்யம் அதீயதாம்

## உபநயனமான அந்தண மாணவர்களுக்கு முக்கிய அறிவிப்பு

"ஜந்தூனாம் நரஜன்ம துர்லபம்
அத: பும்ஸ்த்வம் ததோ விப்ரதா"

என்று ஸ்ரீ சங்கர பகவத்பாதர் தன்னுடைய விவேக சூடாமணி என்னும் நூலில் குறிப்பிடுகின்றார். "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்று ஔவையாரும் இதே கருத்தை கூறுகிறார். அந்தண குலத்தில் பிறந்த அனைவரும் வேதாத்யயனம் செய்ய வேண்டும் என்பது நியதி. இந்த நியதியை பல சிரமங்கள் வந்த பொழுதும் நமது முன்னோர்கள் கடைபிடித்து வந்துள்ளனர். ஆனால் தற்பொழுது உள்ள சமுதாய சூழ்நிலைகளால் இந்த அவிச்சின்னமான வேத பரம்பரையில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இதை சரிசெய்து மீண்டும் இந்த வேத பரம்பரையானது தழைத்தோங்க வேண்டும் என்பதற்காகத்தான் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பல ஊர்களில் பல வேத பாடசாலைகள் ஸ்தாபித்து நடத்தி வருகின்றார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் பள்ளி படிப்பும் மிக முக்கியமான ஒன்றாக மாறிவிட்டதால் வேதாத்யயனம் செய்து கொண்டே பள்ளியிலும் படித்து தேர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பும் ஸ்ரீ சங்கர மடம் மூலம் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் தற்பொழுது காஞ்சிபுரத்தில் உள்ள ஸ்ரீ தண்டபாணி ஒரியண்டல் பள்ளியில் பள்ளி படிப்பும், அதோடு சேர்ந்து வேதம், சம்ஸ்க்ருதம், மற்றும் நமது சம்ப்ரதாய பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழ்மொழியில் உள்ள பக்தி இலக்கியங்களும், நீதி நூற்களும் கற்பிக்கப்படும்.

இதன் சிறப்பம்சம் என்னவென்றால் இத்திட்டத்தில் சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் இரு வழிகளிலும் பயிற்சி தரப்படும். கல்வி, உணவு, தங்குமிடம் எதற்கும் கட்டணம் கிடையாது. 10 வயது முதல் 13 வயது வரையுள்ள உபநயனமான மாணவர்கள் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம். பள்ளி படிப்பு முடிந்ததும் கல்லூரி படிப்புக்கு ஏற்பாடு செய்து தரப்படும்.

பெற்றோர்கள் இந்த பொன்னான வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு தங்கள் குழந்தைகளுக்கும் நமது சமுதாயத்திற்கும் வளமான எதிர்காலம் அமைய ஒத்துழைப்பு அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள்

**R.வெங்கடசுப்ரமண்யன் :8903015221**
**V.P.ஸ்ரீனிவாசன் : 9445104873**
**G.பிரசாந்த் : 8056375421**
**K.ஸ்ரீராம் : 9894775434**

# ஆனி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 15/06/2021 | செவ்வாய் | ஷடசீதி புண்ய காலம் |
| 21/06/2021 | திங்கள் | ஏகாதசி |
| 21/06/2021 | திங்கள் | ஸ்வாதி வேத பாராயணம் |
| 22/06/2021 | செவ்வாய் | ப்ரதோஷ பூஜை |
| 22/06/2021 | செவ்வாய் | அனுஷம் தேர் |
| 23/06/2021 | புதன் | அனுஷம் வேத பாராயணம் |
| 23/06/2021 | புதன் | புத அனுராதா புண்ய காலம் |
| 24/06/2021 | வியாழன் | மூலம் தேர், மூலம்வேத பாராயணம் |
| 24/06/2021 | வியாழன் | பௌர்ணமி பூஜை |
| 26/06/2021 | சனி | உத்ராடம் தேர், உத்ராடம் வேத பாராயணம் |
| 28/06/2021 | திங்கள் | அவிட்டம் தேர், அவிட்டம் வேதபாராயணம் |
| 02/07/2021 | வெள்ளி | ப்ருகு ரேவதி புண்ய காலம் |
| 05/07/2021 | திங்கள் | ஏகாதசி |
| 06/07/2021 | செவ்வாய் | த்வாதசி |
| 07/07/2021 | புதன் | ப்ரதோஷ பூஜை |
| 15/07/2021 | வியாழன் | ஆனி திருமஞ்சனம் |
| 18/06/2021, 25/06/2021, 02/07/2021 - 09/07/2021 வெள்ளிக்கிழமை பூஜை | | |

**இந்த கோரோனா காலத்தில் ஸ்ரீ ஸ்ரீ பெரியா ஆக்ஞைபடி இந்த ஸ்லோகத்தை அனைவரும் பாராயணம் செய்வது மிக உகந்தது.**

## ரோக நிவாரணஶ்லோகா:

அச்யுதானந்த கோவிந்த நாமோச்சாரணபே ஷஜாத்
நஶ்யந்தி ஸகலா ரோகா: ஸத்யம் ஸத்யம் வதாம்யஹம்

ஶரீரே ஜர்ஜரீபூதே வ்யாதிக்ரஸ்தே கலேவரே ।
ஔஷதம் ஜாஹ்னவீதோயம் வைத்யோ நாராயணோ ஹரி ॥

ஸுமீனாக்ஷிபதே ஶம்போ ஸோமஸுந்தரனாயக ।
இமாம் ஆபத முத்பன்னாம் மதீயாம் நாஶய ப்ரபோ ॥

ஆர்தா விஷண்ணா: ஶிதி லாஶ்ச பீதா:
கோரேஷு ச வ்யாதி ஷு வர்தமானா: ॥
ஸங்கீர்த்ய நாராயணஶப் த மாத்ரம்
விமுக்தது: கா: ஸுகினோ பவந்தி

பாலாம்பிகேஶ வைத்யேஶ பவரோக ஹரேதி ச ।
ஜபேன்னாமத்ரயம் நித்யம் மஹாரோக நிவாரணம் ॥

பஞ்சாபகேஶ ஜப்யேஶ ப்ரணதார்திஹரேத ச
ஜபேன்னாமத்ரயம் நித்யம் புனர்ஜன்ம ந வித்யதே ॥

அபஸ்மாரகுஷ்ட க்ஷயார்ஶ-ப்ரமேஹ-
ஜ்வரோன்மாத குல்மாதி ரோகா மஹாந்த: ॥
பிஶாசாஶ்ச ஸர்வே பவத்பத்ரபூதிம்'
விலோக்ய க்ஷணாத் தாரகாரே த்ரவந்தே ॥

கிரந்தீமங்கேப்ய: கிரணநிகுரம்பாம்ருதரஸம்'
ஹ்ருதி த்வாமாதத்தே ஹிமகரஶிலாமூர்திமிவ ய: ।
ஸ ஸர்பாணாம் தர்பம் ஶமயதி ஶகுந்தாதி ப இவ
ஜ்வரப்லுஷ்டான் த்ருஷ்ட்யா ஸுக யதி ஸுதா தாரஸிரயா ॥

மேலும் அச்யுதாய நம: அனந்தாய நம: கோவிந்தாய நம: என்கிற மந்திரத்தை 36, 108 அல்லது 1008 முறை ஜபிக்க வேண்டும். Also, do japa of the mantra acyutaya namah anantaya namah govindaya namah 36, 108, 336 or 1008 times.

# ஸ்ரீமடம் முகாம் நிகழ்ச்சிகள்

சென்ற இதழ் தொடர்ச்சி

## 14.04.2021 - தமிழ் புத்தாண்டு - ப்லவ நாம நூதன ஸம்வத்ஸரம்



’ப்லவம்’ என்றால், மிதப்பது என்று பொருள். பக்தர்களாகிய நாம் அனைவரும், ஆனந்தத்திலும், குருவின் அருளிலும், ஜகன்மாதாவான ஸ்ரீ காமாக்ஷீ தேவியின் அரவணைப்பிலும் மிதந்து கொண்டே இருக்க வேண்டும். விஷுக்கனி தரிசனம் என்பது, புத்தாண்டு தினத்தன்று நடக்கக்கூடிய, ஸம்ப்ரதாய நிகழ்ச்சியாகும். அன்றைய தினம், மங்கள வஸ்துக்கள், தானியங்கள், காய்கறிகள், பழ வகைகள், பூக்கள், இவைகளையெல்லாம் அலங்கரித்து வைத்து, பின்பு அதை நமஸ்கரித்து, கண்ணாடியில் நம்மை பார்ப்பது என்பது, நடை முறையில் இருந்து வருகிறது. நமது ஸ்ரீ மடத்திலும், இந்த பாரம்பரிய வழக்கமானது, தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள், கண்ணாடியை பார்ப்பது என்பது, வருடத்தில் இந்த ஒரே ஒரு நாள் மட்டும் நடக்கும் அரிய நிகழ்வாகும்.

ப்லவ வருட ஆரம்பமான இந்த நன்னாளில், வழக்கம் போல், ஸ்ரீ பரமாச்சார்யாள், ஸ்ரீ ஜெயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் அதிஷ்டானங்களின் முன்பு, விஷுக்கனி தரிசனத்திற்காக அலங்காரம் செய்து வைக்கப்பட்டிருந்தது.

ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள், காலை மங்கள வாத்யத்துடன் எழுந்தருளி, குரு-பரமகுரு அதிஷ்டானங்களை தரிசனம் செய்து, மங்கள ஹாரத்தி காண்பித்தார்கள்.

’கண்ணி கார் நறுங் கொன்றை, காமர் வண்ண மார்பின் தாரும் கொன்றை’ - என்று புறநானூற்றிலே, பரமேச்வரனை அலங்கரிக்கும் கொன்றையைப் பற்றி குறிப்பிடப்படுகிறது. இன்றைய தினம் பரமேச்வர அவதாரமாகிய ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள், கொன்றை மலர் கொத்துக் கிளையைக் கொண்டு, தன் திருக்கரங்களினால், அதிஷ்டானங்களில் சாமரம் வீசி, இந்த புத்தாண்டில் பக்தர்களின் வாழ்வு சிறக்க ப்ரார்த்தனை செய்தார்கள். பின்பு அனைவருக்கும், விஷுக்கனி ப்ரஸாதமாக, ரூபாய் நாணயங்களை அளித்து அனுக்ரஹம் செய்தார்கள்.

மிகவும் விசேஷ தினமான அன்று சங்கீத சமர்ப்பணமாக பல்வேறு இசைக் கலைஞர்கள் பஞ்சரத்ன கீர்த்தனைகள் கோஷ்டி கானமாக ஸ்ரீமடம் ப்ருந்தாவன வளாகத்தில் இசைத்தனர்.

13.04.2021 செவ்வாய் முதல் வசந்தநவராத்திரி உத்ஸவம் ஆரம்பிக்கப்பட்டது. வழக்கம்போல் யாகசாலை நிறுவப்பட்டு ஸ்ரீவித்யா ஹோமம், ஸ்ரீ ராம ஷடாக்ஷரி ஜபம் ஹோமம் விஸ்தாரமாக செய்யப்பட்டது. பத்து நாட்களும் ஸ்ரீமத் ராமாயண பாராயணம் நடந்தது.

21.04.2021 புதன்கிழமை ஸ்ரீ ராம நவமி, ஸ்ரீ ராமருக்கு விசேஷ பூஜைகள், ஸ்ரீவித்யா ஹோம பூர்ணாஹுதி முதலியன நடந்தேறின.

22.04.2021 வியாழக்கிழமை தசமியன்று ஸ்ரீ ராம ஷடாக்ஷரி ஹோமத்தின் பூர்ணாஹுதி செய்யப்பட்டு, ஸ்ரீ ராமர் விக்ரஹத்திற்கு கலசாபிஷேகங்கள் செய்யப்பட்டு பக்தர்களுக்கு ப்ரஸாதம் விநியோகம் செய்யப்பட்டது.

01.05.2021 அன்று சிக்கிம் மாநிலம் காங்டக் நகரத்தில் இயங்கும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் வேதபாடசாலை மாணவர்களுடன் வீடியோ கான்பரன்சிங் மூலம் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் உரையாடினார்கள்.

அன்றைய தினம் மற்றொரு நிகழ்ச்சியில் லோகக்ஷேமத்தை முன்னிட்டு ஏனாத்தூர் ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட தமிழ் பண்ணிசை வேள்வி என்ற நிகழ்விலும் பங்குகொண்டு அனுக்ரஹித்தார்கள்.

**03.05.2021 அன்று Zoom Meeting மூலம் புத்தக வெளியீட்டு நிகழ்வு.**

ஆந்திர முதலமைச்சரின் மக்கள் தொடர்பு அதிகாரி ஸ்ரீ வனம் ஜ்வாலா நரஸிம்மராவ் அவர்கள் தொகுத்த ''Andhra Valmiki Ramayana Rasa Ramya Gathalu'' என்ற புத்தக வெளியீட்டு விழாவில் பங்கேற்ற ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் நூலை வெளியிட்டு தெலுங்கு பக்தி இலக்கியத்தை வருங்கால இளைஞர் சமுதாயத்திற்கு பரப்ப வேண்டிய அவசியம் குறித்து அனுக்ரஹ பாஷணம் வழங்கினார்கள். அனுக்ரஹ பாஷணத்தில் நூலாசிரியரை பாராட்டி பேசிய ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அயோத்யாவில் ராமர் கோவில் அமையும் சமயத்தில் இந்த புத்தக வெளியிடூ நிகழ்வது சாலப் பொருத்தமானது என்று கூறினார்கள். மேலும் தமிழ் பக்தி இலக்கியம் மூலம் இளைஞர்கள் பெற்ற பயன்களை குறிப்பிட்டு அது போல் தெலுங்கு பக்தி இலக்கியமும் வளர வேண்டும் என்று வாழ்த்தினார்கள்.

நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அரசின் அறிவுறுத்தல்படி ஸ்ரீமடத்தில் தர்சன நேரம் வரையறுக்கப்பட்டது. 06.05.2021 முதல் பக்தர்கள் வருகை தடை செய்யப்பட்டது.

## 17-5-2021 அன்று ஸ்ரீ சங்கர ஜெயந்தி மஹோத்ஸவம்

ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதாள் ஜெயந்தியை முன்னிட்டு ஸ்ரீ மடத்தில் ஏழு நாட்கள் தினசரி பகவத் பாதாள் விக்ரஹத்திற்கு அபிஷேகம் செய்விக்கப்பட்டது. தினசரி நான்கு வேதபாராயணம் நடந்தேறியது. ஸ்ரீ ஆசார்யாள் விக்ரஹம் ஒவ்வொரு தினம் ஒரு வாகனத்தில் அலங்கரிக்கப்பட்டு ஸ்ரீமடத்தை ஊர்வலம் வந்து ஸ்ரீ சந்திரமௌளீஸ்வரர் சந்நிதியில் தோடகாஷ்டகம் சொல்லி நமஸ்காரம் நடந்தது. இந்த கைங்கர்யத்தை ஸ்ரீமடத்தில் கைங்கர்யம் செய்து வருபவர்கள் மிகவும் உத்ஸாகத்துடனும், சிரத்தையுடனும் செய்தார்கள். ஸ்ரீ ஆச்சார்யாள் ஸ்வாமிகளின் ஆக்ஞையின்படி ஸ்ரீமடத்தின் அனைத்து கிளைகளிலும் சங்கர பகவத்பாதாள் ஜெயந்தி விமரிசையாக கொண்டாடப்பட்டது. ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் Online மூலம் அனுக்ரஹ பாஷணம் வழங்கினார்கள். நம்முடைய ஸனாதன தர்மம் எங்ஙனம் ஆதி சங்கரரால் விஸ்தாரமாக கொண்டுச் செல்லப்பட்டது என்பதையும் அவருடைய ஜெயந்தியை அனைத்து கிராமங்களிலும் விமரிசையாக கொண்டாட வேண்டும் என்பதையும் எடுத்துக் கூறினார்கள். மேலும் மத்திய பிரதேசத்தின் அமைச்சர் ஸ்ரீ சிவராஜ் சிங் சவ்ஹான் அவர்கள் கலந்து கொண்டு ''ஏகாத்ம திவஸ்'' என்ற தலைப்பில் ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளால் அனுக்ரஹ பாஷணம் ஆன்லைனில் நடந்தேறியது.

25-5-2021 அன்று ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜெயந்தி விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. பூஜா மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ந்ருஸிம்மருக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் விசேஷ பூஜை செய்விக்கப்பட்டது. சந்தியா காலத்தில் ந்ருஸிம்மருடைய அவதார காட்டம் ஸ்ரீமத் பாகவதத்திலிருந்து பாராயணம் செய்யப்பட்டது. ஸ்ரீ ஆதி சங்கரரால் இயற்றப்பட்ட நரஸிம்ம கராவலம்ப ஸ்தோத்திரம் மற்றும் நரஸிம்ம பஞ்சரத்னம் பாராயணம் செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் பௌர்ணமி பூஜையினை செய்தார்கள்.

## 26-05-2021 அன்று ஸ்ரீ மஹாஸ்வாமிகள் ஜெயந்தி மஹோத்ஸவம்

ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் ஜெயந்தி வெகு சிறப்பான முறையில் ஸ்ரீ மடத்தில் கொண்டாடப்படுகிறது. பக்தர்கள் பெருந்திராளாக வந்திருந்து குருவருளும் திருவருளும் பெற்றுச் செல்வார்கள். கடந்த வருடமும், இந்த வருடமும் தற்போது நிலவும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, ஸ்ரீமடத்தில் பக்தர்கள் யாரும்

அனுமதிக்கப்படவில்லை. 128-வது ஜெயந்தி மூன்று நாட்கள் சதுர்வேத பாராயணம், வித்வத்சதஸ் ஆகியவைகள் நடந்தன. ஸ்ரீ மடம் இணைதளம் மற்றும் சங்கரா தொலைக்காட்சியினரால் ஜெயந்தி மஹோத்ஸவம் நேரடியாக ஒளிப்பரப்பப்பட்டது. இதனை பக்தர்கள் தங்களது இல்லங்களிலிருந்து கண்டு களித்தனர். அபிஷேகம், சிறப்பு அலங்காரம், ஆரத்தி போன்றவை வெகு விமரிசையாக நடந்தேறியது. ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் ஆரத்திக்கு பிறகு அனுக்ரஹ பாஷணம் அருளினார்கள். நம்முடைய ஸனாதன தர்மம் மற்றும் வேதத்திற்கு அவர் ஆற்றிய பெரும் பங்கு, சைவ வைணவ பாகுபாடின்றி அவர் ஆற்றிய பெரும் தொண்டினை அவர் நினைவு கூர்ந்தார்கள். ஆச்சார்ய ஸ்வாமிகளின் அருளாசியோடு மாலை 3 மணியளவில், Dr. N.V. Devi Prasad, Retd. Principal, The Madras Sanskrit College, Chennai அவர்களால் ''குரு வைபவம்'' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தப்பட்டது. அன்று மாலை பிருந்தாவத்னதில் ஸ்ரீ மடம் ஆஸ்தான வித்வான ஸ்ரீ ராஜேஷ் மற்றும் குழுவினரால் நாத ஸமர்பணம் நடந்தேறியது. முன்னதாக ஜயந்தியை முன்னிட்டு மாலையில் மூன்று நாட்கள் சங்கீத கச்சேரிகள் நடந்த்து.

**வைகாசி மூலம் நட்சத்திரம் பீடாரோஹணம் விழா**

38 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் (29-05-1983) ஸந்யாச ஆஸ்ரமத்திற்கு எழுந்தருளினார்கள். அந்த மஹோத்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீடம் ஸ்ரீ அனுக்ஞை கணபதி சன்னிதி மற்றும் ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோவிலிலும் சிறப்பு அபிஷேகம் செய்விக்கப்பட்டது. இரண்டு நாட்கள் விசேஷ வேத பாராயணம், சண்டி பாராயணம் மற்றும் ஹோமம் நடைபெற்று கலசநீரால், ஸ்ரீஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளுக்கு அபிஷேகம் செய்விக்கப்பட்டது. அன்று மாலை ஸ்ரீஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் இரண்டு பெரியவாளின் பிருந்தாவனங்களிலும் புஷ்பாஞ்சலி செய்தார்கள்.

தொடர்ந்து ஸ்ரீ மஹா திரிபுர சுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீஸ்வரர் பூஜை மூன்று காலமும் நடைபெற்று வருகிறது. அரசின் அறுவுறுத்தல் படி பக்தர்கள் ஸ்ரீமடத்தில் அனுமதிக்கப்படுதில்லை. எல்லா விழாக்களும் வைபவங்களும் ஸ்ரீமடத்தில் கைங்கர்யம் செய்பவர்கள் முன்னின்று நடத்துகிறார்கள்.

தொடரும்

# ஆசாரக் கோவை

**ந.ரா. முருகவேள்**

**உறங்கும் முறை**

*மாலைப் பொழுதில் படுத்துத் தூங்குதல், வேற்றூர்க்குத் துணையின்றி வழிநடந்து செல்லுதல், உணவு கொள்ளுதல், பிறரிடம் வெகுண்டு சண்டையிடுதல் முதலியன கூடா. இராக் காலத்தில் இருட்டில் புறம் போகாமல், பாதுகாப்பான ஓர் இடத்தில் தங்கிப் பள்ளி கொள்ளுதலே முறை. படுக்கச் செல்லுமுன் கடவுளை வணங்கி வடக்குத் திசையிலும், வடகிழக்கு வடமேற்கு தென்கிழக்கு தென்மேற்கு முதலிய திசைகளிலும் தலை வைக்காமல், உடம்பில் போர்வை இட்டுக்கொண்டு படுத்தல் நலம். தெய்வத் திருவுருவங்களுக்கும் அந்தணர்களுக்கும் இடையில் புகுந்து நுழைந்து செல்லுதல் ஆகாது. யாரேனும் தும்மினால் ''நீடு வாழ்க' என்று வாழ்த்துவது பெரியவர்கள் பண்பு. அங்ஙனம் நாம் தும்மும்பொழுது பெரியோர்கள் வாழ்த்தினால், அதற்கு நன்றி தெரிவித்து அவர்களை வணங்குக. நம்மோடு ஒத்த நண்பன் எதிரே வந்தால், அவனிடம் இன்னுரை கூறி அவனோடு சிறிது தூரம் உடன்செல்லுக.*

**குற்றங்கள் பல**

*நல்ல புல் வளர்ந்துள்ள இடம், பயிர் வளர்ந்துள்ள நிலம், பசுவின் சாணம், சுடுகாடு, பலரும் நடக்கிற வழி, நீர்நிலை, திருக்கோயில், நிழலுள்ள இடம், பசுக்கள் நிற்கும் இடம், வெண் சாம்பல் ஆகிய பத்து இடங்களிலும் நாம் எச்சில் உமிழவோ, மலசலம் கழிக்கவோ கூடாது. பகற்பொழுதில் தெற்கு நோக்கியும், இரவில் வடக்கு நோக்கியும் இருந்து மலசலம் கழித்தல் கூடாது.*

*ஓமத் தீ அல்லது வேள்வித் தீயைப் பகற்பொழுதில் நீர் ஊற்றி அவித்தல் ஆகாது. தண்ணீரில் நின்றுகொண்டும், நடந்துகொண்டும் இல்லாமல், ஒரு கலத்தில் நீரை முகந்துகொண்டு வாய் அலம்புதல் வேண்டும்.*

*விளக்குக்கும் ஒருவருக்கும் ஊடறுத்துச் செல்லுதல், சுவரின் மேல் உமிழ்தல், பிறர் உடுத்த அழுக்காடையை அணிதல், பிறர்மீது தமது ஆடை படும்படி செல்லுதல், பலர் நடுவில் ஆடையை உதறுதல் முதலியன குற்றமாகும்.*

*'பிறன் மனைவியை விரும்புதல், கள்குடித்தல், களவு செய்தல், சூதாடுதல், கொலை செய்தல் ஆகியவற்றை மனத்தாலும் நினைக்கலாகாது. இவை பிறர் பழிப்பதற்கு இடமாவதோடு நரகத்திற்கும் ஏதுவாகும்.*

பொய் பேசுதல், கோள் சொல்லுதல், பிறர் பொருளைக் கவர்தல், ‘பொறாமைப்படுதல் என்னும் நான்கினையும் நம் மனத்தினாலும் நினைத்தல் கூடாது. நினைப்பின் வறுமை எய்தி ஐயம் (பிச்சை) புகுவிக்கும்; நரகத்தில் செலுத்தும்; இறைவனின் சீற்றத்திற்கு ஆளாக்கும்.

அளத்தற் கருவியாகிய படியை மணைமேல் வைத்தலும், மணையைக் கவிழ்த்து வைத்தலும், புதிய ஆடையைத் தலைக்கு அடியில் விரித்தலும், தலைக்கு அடியில் கட்டிலிட்டுப் படுத்தலும் ஆகா. தம்மை அறியாதார் எதரில் (வீட்டு வாசலில்) நிற்றல் நன்றன்று.

திருமணப் பந்தலின் கீழே துடைப்பம், செத்தை, பூவின் குறை இதழ், பழையக் கரிப்பானை, கிழிந்த கட்டில் இவற்றைப் பரப்பலாகாது.

**குடும்ப நலம்**

தம்முடைய குடும்பம் செழித்துச் சிறக்க வேண்டும் என்று விரும்பாதவர் எவரும் இலர். அவ் விருப்பம் நிறைவேறவும் ஆசாரக் கோவை நல்ல அறிவுரை வழங்குகிறது. நாம் அதிகாலையில் துயில் எழுந்திருத்தல் வேண்டும். வீடு அழகாக இருக்கும்படி குப்பை முதலியவற்றைப் போக்கித் தூய்மை செய்து, பசுஞ்சாணத்தினால் வீட்டை மெழுகி, கோசலத்தை வீடு எங்கும் தெளித்து, பாத்திரங்களைக் கழுவி, நீர் முகந்து நிரப்புதற்குரிய சால்கரகம் முதலியவற்றைத் துப்புரவு செய்து நீரை முகந்து நிரப்பி அவற்றுக்கு மலர் அணிந்து, குடும்பம் செழிக்க வேண்டும் என்று இறைவனைத் தியானித்துக்கொண்டு அடுப்பினுள் நெருப்பிட வேண்டும். இவ்வாறு செய்தால் குடும்ப நலம் பெருகும்.

**உடனுறைவு**

ஆசாரக் கோவை என்னும் நூல் உண்ணல் உறங்கல் படுத்தல் நடத்தல் முதலிய செய்திகளை மட்டுமின்றி வேறு சில நுட்பமான செய்திகளையும் நமக்கு அறிவுறுத்துகிறது. தொல்காப்பியம், இறையனார் களவியல் முதலிய பழந்தமிழ் லக்கண நூல்களில் குறித்துள்ளபடி, கணவன் மனைவியர் உடன் உறைவு பற்றிய செய்திகளையும் நமக்குக்கூறுகிறது. மனைவிக்கு மாதப்பூப்பு நிகழ்ந்தால் மூன்று நாள் அளவும் அவளது முகத்தைக் கணவன் காணலாகாது. மூன்று நாளும் கழிந்து, தலை முழுகியபின் பன்னிரண்டு நாள் அளவும், மனைவியைக் கணவன் பிரியலாகாது. உச்சிவேளை, நள்ளிரவு, காலை மாலை, சிவபிரானுக்கு உரிய திருவாதிரை, திருமாலுக்கு உரிய திருவோணம், அமாவாசை, பௌர்ணமி, அஷ்டமி, பிறந்த நாள் என்பனவற்றில் கணவன் மனைவியர் சேருதல் ஆகாது.

### ஐம்பெருங் குரவர்

*அரசன் ஆசிரியர் தாய் தந்தை தமையன் என்றும் ஐவரும் நம் வணக்கத்திற்கு உரிய சிறந்த பெரியோர்கள் ஆவர். இந்த ஐவரையும் கடவுளுக்குச் சமமாக மதித்துத் தொழுது வணங்குதல் வேண்டும். இது அனைவரும் உடன்பட்டு இயைந்த சிறந்த நெறியாகும். பெரியோர் சொல்லைப் புறக்கணித்து, நாமே நம் மனம் போனபடி எதனையும் செய்தல் கூடாது. ஏற்றுக்கொண்ட விரதத்தை நிறைவேற்றாமல் குறையாக விடுதல் கூடாது. கொண்ட விரதத்தை மறத்தல் ஆகாது. உவாக் காலங்களில் பேருண்டி கொள்ளுதலும், பயன் தரும் மரங்களை வெட்டுதலும் கூடாது.*

### நாட்கடமைகள்

*ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம் என்பது விதி. என்றாலும் அட்டமி, அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தசி முதலிய நாட்களிலும், அரசனுக்குத் தீங்கு நேரும் நாட்களிலும், பூகம்பம் இடி முழக்கம் தூய்மையின்மை முதலியன நேரும் நாட்களிலும் நாம் ஓதுதல் கூடாது.*

*திருமண நாள், கடவுளர் திருவிழா நாள், பிதிரர்களுக்கு வழிபாடு செய்யும் நாள், வேள்விகள் செய்யும் நாள் ஆகிய ஐந்திலும் பல வகை அறங்களைச் செய்தலும், விருந்தினர்களுக்கும் ஏழைகளுக்கும் உணவு அளித்தலும் நலம் பயக்கும்.*

### செய்யத் தக்கன

*அறிவுடையவர்கள் யாரையும் பழித்துரைக்க மாட்டார்கள்; இகழ்ந்து ஏளனமாகப் பேசமாட்டார்கள்; பலர் நடுவில் உறங்க மாட்டார்கள். தம்மால் இயலாதவற்றைத் தருவதாகவோ செய்வதாகவோ சொல்லிப் - பின்னர் ஏமாற்றமாட்டார்கள். ஏழைகளை மனம் நோகும்படி இழித்துக் கூறமாட்டார்கள். வஞ்சனைச் சொற்கள், நயமில்லாத சொற்கள், வாய்க்கு வரும் சொற்கள், பிறரைப் பழிக்கும் சொற்கள், புறம் கூறும் சொற்கள் ஆகியவற்றை ஒழுக்கமுடையவர்கள் 'ஒருபோதும் கூறமாட்டார்கள். தமது உடல்நலத்தைப் போற்றிப் பாதுகாத்துக் கொள்ள விரும்புகிறவர்கள் மின்னலின் ஒளியையும், விண்மீனின் வீழ்ச்சியையும், விலைமகளின் ஒப்பனையையும், காலை மாலைகளின் வெயிலையும் உற்று நோக்கமாட்டார்கள்.*

*ஒரு பொருளை வீசி எறிதல், கல் எறிதல், வெறுக்கத்தக்க முற்கு வீளை முதலிய ஒலிகளைச் செய்தல், பிறரைக் கைதட்டிக் கூவி அழைத்தல், பிறரைப் போல நடித்து நையாண்டி (விகிர்தம்) செய்தல், பிறரிடம் சினந்து சிடுசிடுத்தல், ஒளித்துச் செய்தல், முதலியவற்றைப் பண்பாடுடையவர்கள் செய்தல் கூடாது.*

போர் நிகழும் இடம், கள் குடிக்கும் இடம், விலைமகளிர் வாழும் இடம், நண்பர்கள் கொள்கையும் பண்பும் இழக்கும் இடம், பலதிற மக்கள் கூடும் தண்ணீர்த்துறை போன்ற இடங்களில், அறிவுடையவர்கள் நெடுநேரம் நிற்க மாட்டார்கள்.

தம் உடலுக்கு நோயின்மையை விரும்புவார்கள் பாழான வீடு, கோயில், சுடுகாடு, ஊருக்குப் புறம்பே தனித்துள்ள முதுமரம் இவற்றிற்குத் துணையுடன் அன்றித் தனியே செல்லமாட்டார்கள். பகலில் உறக்கம் கொள்ள மாட்டார்கள்.


ஒருவர் புறப்பட்டுச் செல்லும்போது பின்னே நின்று கூவி அழைத்தல், தும்முதல், எங்கே செல்கின்றீர் என வினவுதல், ஒருவருக்கு நேர் எதிரே சென்று மிக நெருங்கிப் பேசுதல் முதலியன செய்தல் கூடாது. பெரியவர்களின் பக்கத்தில் சற்று விலகியிருந்து பணிவு தோன்றப் பேசுதல், பெரியவர்களைப் பணிந்து வலம் செல்லுதல் முதலியன, பண்பாடுடையவர்களின் செயலாகும்.

ஒருவர் உடம்பைப் பார்த்து நன்றாய் இருக்கிறதென்று (அல்லது உடல் நன்றாய் இல்லையே என்று) சொல்லுதலும், விளக்கின் அருகில் சென்று வாயால் ஊதி அணைத்தலும், சமையலறையிலுள்ள அடுப்பருகில் நெருப்பு மிக நெருங்கி இருந்து குளிர்காய்தலும் கூடா. தம்மைவிடப் பெரியவர்களுடன் செல்லும்போது, தாம் மட்டும் வாகனம் ஏறிச் செல்லுதலும், காலில் செருப்பணிந்து குடைபிடித்துச் செல்லுதலும் முறையல்ல. தாய், புதல்வி, சகோதரி முதலிய உறவு உரிமை உடையவர்களாயினும், பெண்கள் இருக்குமிடத்தில் கூடிய வரையில் ஒருவன் தனித்துச் சென்று பழகாமல் இருப்பது நல்லது.

அரசன் அல்லது தலைவன் செய்யும் செயல்களில் வெறுப்புக் காட்டிக் கொள்ளுதல், அவரோடு கருத்து வேறுபட்டுக் கலகம் செய்தல், சிறிது ஒதுங்கி மதிப்பாக நில்லாமல் அவர்கள் முகத்துக்கு எதிரே நிற்றல், அரசன் தனியே இருக்கும்போது தம்முடைய செயல்களையும் செய்திகளையுமே பேசிக்கொண்டிருத்தல் முதலியன குற்றங்களாகும். அரசன், 'காக்கை வெண்ணிறமுடையது. என்றாலும், அன்று என்று மறுத்துக் கூறாமல், 'ஆம், ஆம்!' என்று உடன்பட்டு-நிற்றல், ஒரு வகையில் நலம் பயப்பதேயாகும்.

(தொடரும்)

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி



பெரியவா சில சமயங்களில் எதற்கு இப்படி செய்கிறார் என்பது புரியாத புதிராக இருக்கும். ஆனால் அந்த நிகழ்ச்சி முடிந்தபின் நமக்குப் புரியும். இப்படி பல ஸம்பவங்கள் நடந்துள்ளன. அதில் ஒன்றுதான் கீழே தந்துள்ளது.

இருபது முப்பது வருடங்களுக்கு முன் இருக்கும். கரூர் பக்கம் கேம்ப் என்று முடிவானது. பல ஊர்களில் தங்கி கரூர் பக்கம் கேம்ப் போகிறது. பெரியவா மேனாவில் அமர்ந்திருக்கா. ஒரு ராத்ரி மேனாவைத் தூக்கிக் கொண்டு போகிறார்கள். ஒரு சந்திப்பு. அங்கே பாதை இரண்டாகப் பிரிகிறது. நேரே போனா கரூர் வலப்பக்கம் போனா ஏதோ ஒரு க்ராமம்.

மேனாதூக்கிகள் நேரேபோகும் சமயம் மேனாவிலிருந்து ஒரு தட்டல். வலப்பக்கம் போக உத்தரவு ஆயிற்று. யாருக்கும் ஒன்றும் புரியவில்லை. அவர் சொல்லியபடியே வலப்பக்கம் போக ஒரு குக்ராமம் வந்தது.

மடத்துப் பரிவாரங்களைப் பார்த்த பாமர ஜனங்கள் வியந்து போயினர். ஒரு பாழடைந்த கட்டடத்தில் பெரியவா இறங்கினார். அங்கிருந்த ஜனங்களிடம் இங்கே சிவன் கோயில் இருக்கா என்று கேட்க அவர்கள் இந்த ஊரில் பெருமாள் கோவில் தான் உள்ளது என்றனர். யாருக்கும் சிவன் கோவில் இருப்பதாகத் தெரியவில்லை. அப்போது அந்த ஊரில் இருக்கும் வயதானவர் ஒருவரை அழைத்து வந்து கேட்ட போதும் அவரும் இங்கே சிவன் கோவில் இருந்ததில்லை என்றார். இப்படி அந்த இரவு கழிந்தது.

மறு நாள் பெரியவா பூஜைகளை முடித்திருந்த சமயம். ஒரு முஸ்லீம் தம்பதி அங்கே தர்சனத்துக்கு வந்தனர். பெரியவாளுக்கு வந்தனம் செய்தபின் ஆச்சர்யமான ஒரு விஷயத்தைச் சொன்னார். ''சாமி நாங்க இங்க பலவருஷமா இருக்கோங்க. எங்க வீடு அந்த பக்கமா இருக்குங்க. முந்தா நாள் பின்பக்கம் போய் ஏதோ தோண்ட போனோங்க. அங்க பெரிய சிவலிங்கம் இருந்திச்சிங்க. இங்க முன்னால எதோ கோவில் இருந்திருக்கணுங்க. எங்களுக்குப் பயமாடுச்சு. என்ன பண்றதுன்னு தெரியலீங்க. நீங்கதான் வழிகாட்டணுங்க'' இப்படி அவர் சொன்னதும் எல்லோருக்கும் ஆச்சர்யம். எதைத் தேடினமோ அதுவே கையில் வந்து விழுந்தது. அவர் மேலும் சொன்னார்.

''என் வீடு சிவன் சொத்துங்க. அது ஒங்களுக்குத்தான். அதை ஊரார் கிட்டயே ஒப்படைக்கிறங்க''என்றார். பின்பு ஒரு கமிட்டி அமைத்து அவர் வீட்டிலிருந்த சிவனுக்கு ஒரு கோவில் எழுப்ப தீர்மானம் ஆயிற்று. அதற்கு வேண்டிய பண உதவி, த்ரவ்ய உதவி இவைகளை அந்த கமிட்டி கவனித்துக் கொண்டது. சிவாலயமும் பின்பு வந்தது.

மறு நாள் பெரியவா அந்த முஸ்லீமிடம் மார்க்க் கடமை(ஹஜ் ) பண்ணிட்டீங்களா? என்று வினவ இல்லீங்க அதற்கு வேண்டிய பண வசதி இல்லை என்றார். உடனே பெரியவா ஊர்ஜனங்களிடம் இவர் நமக்கு இவருடைய வீட்டை நமக்குத் தந்துள்ளார். அவருக்கு நாம் ப்ரத்யுபகாரமாக இவர் ஹஜ் யாத்ரை போக பணம் தந்து உதவ வேண்டும் என்று கூறி ஊர் ஜனங்களிடமிருந்து பணம் வசூல் செய்து அவருக்கு தந்து ஆசி வழங்கினார். எம்மதத்தினராயினும் அவர் மதக் கொள்கையை மதிப்பது பெரியாவாளுடைய குணம். இப்படி எதற்காக அந்த ஊருக்கு வந்தார் என்பது பின்புதான் தெரிந்தது. இதை விட ஆச்சர்யம் முக்கால்வாசி பேச்சுக்கள் பெரிவாளின் மௌனத்திலேயே நிகழ்ந்தது.

| ஸனாத தர்மப்புதிர்கள் ஏப்ரல் விடைகள் | | | |
|---|---|---|---|
| 1. | வேங்கட சேஷ, வேத, கருட, வ்ருஷப, அர்ஜுன, ஆனந்த மலைகள் | 6. | ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம், அனுக்ரஹம் |
| 2. | மகாமகம் | 7. | த்ரிபுடீ ஞானம் |
| 3. | அமர்கண்ட் | 8. | பெண்கள் செய்யும் நாட்யம் |
| 4. | சாக்ஷி நாதர் | 9. | சிவபெருமான் |
| 5. | மௌனி அமாவாசை | 10. | ஷீரிடி சாய் பாபா |

முள்ளன்றம் என்னும் ஊர் ஆரணிக்கு அருகில் உள்ளது. அடையப்பலம் மாதிரி அக்ரஹாரம் நிறைந்த க்ராமம். பல அந்தண குடும்பங்கள் அங்கு நித்ய கர்மானுஷ்டானம் மேற்கொண்டு எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். அங்கு ஓர் ஏழை ப்ராம்மணர் தன் பெண்ணின் கல்யாணத்திற்காக பணம் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். வரன் வந்தும் தனம் இல்லை. கவலையுடன் பெரியவாளைத் தர்சிக்க காஞ்சீபுரம் வந்தார். தர்சனம் ஆயிற்று. பெரிவாளிடம் தன் கோரிக்கையை வைத்தார். அவர் பதிலேதும் சொல்லவில்லை. சுமார் பத்து நாள் தினமும் பெரியவா ஏதேனும் அனுக்ரஹிப்பார் என்று அங்கேயே இருந்தார். எதுவும் அவர் எதிர்பார்த்தாற்போல் நடக்கவில்லை. மனம் ஒடிந்து ஒரு நாள் தன்னுடைய ப்ராப்தம் இவ்வள்வுதான் என்று எண்ணிக் கொண்டு அங்கிருந்து தன் ஊருக்குக் கிளம்பினார்.

சில நாட்கள் கழித்து ஒரு தனவந்தர் தன் குடும்பத்துடன் பெரியவாளைப் பார்க்க வந்தார். பெரியவாளிடம் தான் கொணர்ந்த மூட்டையை சமர்ப்பித்தார். இது என்ன என்று கேட்க கல்யாணத்திற்கான பாத்ர பண்டங்கள் துணிகள் என்று கூற புன்னகைத்து பெரியவா அவரை ஆசீர்வதித்து அனுப்பினார். பின்பு தன்னை கான வந்த இன்னொரு நபரிடம் இதை கொண்டுபோய் முள்ளன்றம் என்னும் ஊரில் உள்ள வைதிகரிடம் சேர்த்துவிட பணித்தார். அவருக்கோ ஊர் தெரியாது. போவதற்கு வாகனம் கிடையாது. வேறு வழியின்றி பஸ் வாகனத்தில் மூட்டையை ஏற்றினார். நடத்துனர் மூட்டைக்கு சார்ஜ் கேட்க உண்மை நிலையை அவருக்குச் சொல்ல பெரியவங்க அனுப்பிச்சாங்களா அப்படீன்னா அதுக்கு சார்ஜ் வேணாம் என்று கூறினார். அடுத்தது நடந்தது தான் ஆச்சர்யம். வழக்கமாக ஆரணிவரைதான் பஸ் போகும். முள்ளன்றம்போக வண்டியில்தான் போகணும். எப்படி போவது என்று திகைத்து நின்ற அவரிடம் நடத்துனர் ''ஸாமி கவலை வேண்டாம்.

பஸ்ஸை முள்ளன்றத்துக்கே ஓட்றோம்.''என்று கூறி க்ராமத்துக்கே சென்று அந்த வைதிகர் வீட்டு வாசலில் நிறுத்தி மூட்டையையும் அவரையும் இறக்கிவிட்டார். வைதிகருக்கோ வியப்பு. ஆனந்த பாஷ்பம் மேலிட்டது. முதலில் ஏதும் பேசாமலிருந்த பெரியவா வீட்டிற்கே தனக்கு வேண்டிய பொருளை அனுப்பி வைத்ததை எண்ணி நெகிழ்ந்து போனார். இன்னொரு சம்பவம் பற்றி பெரியவாளின் அணுகத் தொண்டர் கூறியது. ஒரு வீர சைவத்தைச் சார்ந்த பக்தர். பெரியவாளிடம் அத்யந்த பக்தர். காஞ்சீபுரத்திலிருந்து பல மைல்கள் தாண்டி இருக்கும் ஊரிலிருந்து

பெரியவாளைத் தர்சிக்க வருவார். தீவிர வீர சைவர். வழியில் எதுவும் சாப்பிடமாட்டார். மடத்துக்கு வருவார்.பெரியவாளை தர்சனம் செய்து கொள்வார். அங்கேயே போஜனம் முடிப்பார். அங்கேயே தங்குவார். அங்கு இருக்கும் நாட்கள் அனைத்தும் இப்படியே கழியும்.

ஒரு நாள் அங்கிருந்து கிளம்பும் முன் பெரியவா தர்சனத்திற்குப் பின் பெரியவா அவரைப் பார்த்து வழியில் சோடாவாவது குடி என்று கூற இதுவரை பேசாத முனிவர் பேசியதைக் கேட்டு ஆச்சர்யமடைந்தார். தன்னூருக்கு போகும் பஸ்சில் ஏறிபயணம் தொடர்ந்தார். ட்ரைவருக்குப் பின் ஸீட்டில் அமர்ந்திருந்தார். பஸ் போய் கொண்டிருந்தது. அதில் சில இளைஞர்கள் கேலியும் கிண்டலுமாக பேசிகொண்டு வந்தனர்.

ஓரிடத்தில் பஸ் நின்றதும் பயணிகள் ஸ்ரமபரிகாரம் செய்துகொள்ள இறங்கினர். வீரசைவரும் தான் கொண்டுவரும் பையை (விபூதி ருத்ராக்ஷம் இருக்கும் பை) அங்கேவைத்துவிட்டு ஸ்வாமிகள் சொன்னபடி ஸோடா குடிக்கச் சென்றார் .திரும்பி பஸ்ஸில் ஏறிய அவர் தன்னிடத்தை அந்த இளைஞ்யர்கள் எடுத்துகொண்டிருந்ததைக் கண்டார். அப்போது அதில் ஒருவன் ‘‘ஏ பெரிசு நீ போய் பின்னால ஒக்காரு. அந்த பை அங்க போட்ருக்கோம்’’ என்று கூற அவரும் பின்னால் போய் அமர்ந்தார். பஸ்ஸூம் கிளம்பி போக ஆரம்பித்தது. கொஞ்ச நாழியில் பெரிய சத்தத்துடன் பஸ் தடம் புரண்டு நின்றது.எதிரில் வேகமாக வந்த லாரி இதன் மீது மோதியதின் விளைவு. ட்ரைவர் சீட்டில் அமர்ந்திருந்த அந்த இளைஞர்கள் துர்பாக்யமாக மரனமெய்தினர். அவருக்கோ ரொம்ப படபடப்பு.

பெரியவா ஸோடா குடிக்கச் சொன்னதின் பொருள் விளங்கிற்று. அதன் மூலம்தன் உயிரை எப்படி பெரியவா காப்பாற்றினார் என்பதை தொண்டர்களிடம் கூறி மகிழ்வார். இதுவும் பெரியவாளின் லீலை.

# புராணக் கதை

*காஞ்சி வாதூலன்*

## தினை அளவு வினை பனை அளவு பயன்

ஸ்வாமி சிலர் செழிப்பாக இருக்கவும் சிலர் ஒன்றுமே இல்லாமல் இருபதற்கும் கர்மா தான் காரணம். புரிகிறது. ஆனால் சிலர் நிரம்ப செழிப்பாக இருக்கக் காரணம் என்ன? அந்த சிலரும் சின்ன கார்யம் தான் எனினும் ஸ்ரத்தையாகச் செய்திருப்பர். அதனால் பெறும் பயன் விளைந்திருக்கும். இந்தக் கதையைக் கேள் என்று கூறலானார்.

ஸத்யபாமா க்ருஷ்ணருக்கு மிகவும் வேண்டிய மனைவி. அவளுக்கு அதில் பெரும் பெருமை. சாதாரணமான தனக்காக இந்த்ரனை எதிர்த்தார், கல்பகவ்ருக்ஷத்தைக் கொணர்ந்தார், தன்னுடன் மிகவும் ஆசையுடன் இருக்கிறார். தான் அவ்வளவு பெரிய ஆள் இல்லையே என்று பல நாள் நினைத்துருந்ததை ஒரு நாள் அவரிடம் தனிமையில் இருக்கும்போது கேட்டுவிட்டாள். புன்னகையுடன் க்ருஷ்ணர் கூறலானார்.

‘மாயாபுரி நகரத்தில் தேவசர்மா என்னும் வேத பண்டிதர் இருந்தார். ஒழுக்க சீலர், வேத வேள்விகளை செவ்வனே நடத்திவந்தார். அவருக்கு குணவதி என்னும் பெண். தக்க சமயத்தில் அவளுக்கு சந்த்ர சர்மா எனும் ப்ராம்மண பண்டிதனுக்கு மணம் முடித்தாள். மூவரும் அந்த ஆஸ்ரமத்தில் வாழ்க்கையை நடத்தி வந்தனர். அவர்களுக்குள் ஒருவித பாந்தவ்யம் நிலவிவந்தது.

ஒரு சமயம் குணவதி வீட்டில் இருக்க இருவரும் யாக சமபந்தமான பொருள்களை சேகரிக்க காட்டிற்குச் செல்ல எதிர்பாராதவிதமாக ஒரு பயங்கரமான விபத்தில் சிக்கி மாய்ந்தனர். மாளாத்துயரும் அதிர்ச்சியும் நிறைந்த வாழ்க்கை குணவதிக்கு ஏற்பட்டது. அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. இருப்பினும் உறுதியான மனத்துடன் வாழ்க்கையை நடத்த ஆரம்பித்தாள். குளிர் நீரில் நீராடி விஷ்ணுவிற்கான பூஜையை செவ்வனே செய்வாள். பக்தியும், ஸ்ரத்தையும் நிறைந்த அவள் வாழ்க்கை விஷ்ணுவிற்கே அர்ப்பணிக்கப்பட்டது. பல வருடங்கள் ஓடின. தன் கிழப்பருவத்திலும் மனம் தளராமல் குளிர் நீரில் மூழ்கி ஸ்னானம் செய்வாள். கார்திகை, ஏகாதசி அன்று கடுமையான வ்ரதங்களை மேற்கொள்வாள். அவள் ஆயுளும் முடிய அவளை விஷ்ணு பார்ஷதர்கள் வைகுண்டத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இது முடிந்து அடுத்த யுகம் ஆராம்பமாயிற்று. நான் க்ருஷ்ணராக அவதாரம் செய்யும் காலம். என்னுடைய பார்ஷதர்களும் என்னுடன் பூலோகத்தில் வர வேண்டிய நிலை. குணவதியான நீ ஸத்யபாமாகவும் தேவசர்மா உன் பிதா ஸத்ரா ஜித்தாகவும், உன் கணவன் சந்த்ர சர்மா அக்ரூராகவும் அவதரித்தனர்.

சென்ற யுகத்தில் நீ செய்த கடுமையான ஆசார ஒழுக்கத்தால் என் மனைவியானாய். கார்த்திகை ஏகாதசி அன்று ஒரு தடவை ஸ்ரத்தையாக துளஸீ பூஜை செய்தாலே பல மடங்கு பலன். நீயோ பல வருடங்கள் செய்த ஆத்மார்த்த பூஜையால் கல்பகவ்ருக்ஷமே கிடைத்தது. ''என்று கூறி முடித்தார் க்ருஷ்ணர்.

''அதனால் நாம் செய்யும் கார்யங்கள் பக்தி ஸ்ரத்தையுடன் இருக்க வேண்டும். இதுதான் ஸூக்ஷமம். நீ கேட்ட கேள்விக்கு பதில் இதுதான் என்று கூறி கதையை முடித்தார் பௌராணிகர்.

**சிஷ்யன் பௌராணிகரிடம் கேட்கிறான்.**

பல புராணங்களில் ஒரே கதை வெவ்வேறு விதமாக உள்ளதே அது ஏன்? பௌராணிகர். ஒன்று ஒரே கதை வெவ்வேறு யுகங்களில் சொல்லப்படும் போது மாறுதல்கள் வரும். இரண்டு செவிவழி செய்தியாய் சொல்லப்படும் போது மாறுதல்கள் வரும். சான்றாக தக்ஷயஞ்யம் பற்றியும் ஸதீ தேவியின் த்யாகம் பற்றியும் தெரியும். அதில் சில மாறுதல்களுடன் ஸதீதேவியின் சரித்ரம் சொல்லப்படிகிறது. அதைபார்ப்போம்.

ஆதியில் ப்ரம்மா படைக்கத் தொடங்க தந்நுடலிலிருந்தே பத்து புத்ரர் களை பிறப்பித்தார். பெண்கள் மனம் கவரும் ஸந்த்யா என்னும் பெண்ணையும் படைத்தார். அவருக்கே அவள்மேல் ஆசை வந்தது.

இது தெரிந்த சிவன் அவரைக் கண்டித்து எல்லா பெண்களையும் தாயாக பாவிக்கக் கட்டளையிட்டார். அனைவரது முன்னிலையிலும் அந்த அவமானத்தைத் தாங்காத ப்ரம்மா சிவனுக்கு பெண் மூலம் உபத்ரவம் தர தீர்மானித்தார். காமதேவனை அழைத்து சிவனை மோகிக்க வைக்க கட்டளையிட அவனும் செய்ய நேர்ந்து பஸ்மமானான்.

மிகவும் மனம் நொந்த ப்ரம்மா விஷ்ணுவை சரடைய அவர் எப்படி தானும் ப்ரம்மாவும் சங்கரரால் படைக்கப்பட்டவர்கள் என்று விரித்துரைத்தார். அவர்கள் சன்கரரைப் ப்ரார்த்திக்க அவர் அவர்கள் முன் தோன்றி'' என்னுடைய ஓரம்சம் ருத்ர சிவனாக ப்ரம்மாவின் உடம்பிலிருந்து பிறக்கும். நீங்கள் மூவரும் என்னுடைய அம்சமே.

இருப்பினும் ருத்ரர் ஒருபடி மேல் அதேபோல் உமாசிவதேவி மூன்று தோற்றங்களை உடையவள். லக்ஷ்மீ நாராயணரையும், ஸரஸ்வதி ப்ரம்மா வையும் ஸதீ என்னுடையவளாகவும் இருப்பர்'' என்றார். மூவரும் தங்கள் மனைவியருடன் சிவதேவி ஸதிதேவியாகப் பிறக்க ஆலோசனை செய்தனர்.

ப்ரம்மா துர்காதேவியை நோக்கிக் கடும் தவம் செய்தார். அவர்முன் தோன்றிய தேவி அவர் தவத்தின் காரணத்தைக் கேட்க அவர்' சிவனின் அம்சமான ருத்ரர் கைலாஸத்தில் தவமிருக்கிறார்.அவர் மனதில் காமமோ, காதலோ தோன்றுவதில்லை. தவத்தை முறிக்க நான் செய்த முயற்சிகள் வீணே. உலக நன்மையின் பொருட்டு நீங்கள் தக்ஷப்ரஜாபதியின் பெண் ஸதீ தேவியாக பிறக்க வேண்டும் '' என்று கேட்க அவளும் சம்மதித்தாள்.

தக்ஷப்ரஜாபதி ஜகதம்பிகையைக் குறித்து த்யானம் மேற்கொண்டான். அவனுக்கு முன் தோன்றிய அவள் அவன் விருப்பத்திற்கு இணங்க அவனுக்குப் பெண்ணாகப் பிறக்க சம்மதித்தாள். ஒரு நிபந்தனையையும் வைத்தாள். எக்காலத்திலும் மஹாதேவனின் பத்னியாக விளங்கும் என்னை எக்காரணம் கொண்டும் அவமதிக்கக் கூடாது என்பது அந்த நிபந்தனை. வரப்போகும் ஆபத்தை உணராத தக்ஷன் சம்மதித்தான். மும்மூர்திகளும் ஆனந்தித்தனர். இதுதான் சிவதேவியின் ஸதீதேவியின் அவதாரம். பின்பு நடந்த கதை எல்லாருக்கும் தெரியும். என்று முடித்தார் பௌராணிகர்

(சிவ புராணம்)

## ஸனாதன தர்மப் புதிர்கள் மே வினாக்கள்

1. தம்பிரான் தோழர் என்றழைக்கபடுபவர் யார்?
2. வேதத்தை தமிழ் உலகம் எப்படி அழைக்கும்
3. காவிரை ஆறு கடலில் சனக்மிக்குமிடம்
4. கர்னாடக ஸங்கீத பிதாமஹர் என்றழைக்கப்படுபவர்
5. நப்பின்னை யார்?
6. ப்ரம்மஸூத்ரங்கள் எத்தனை பாதங்கள் கொண்டது
7. குறிப்பிட்ட வ்யாதிகளை வைத்துக் கொண்டு தொடங்கும் திருப்புகழ்.
8. அரசபதவியைத் துறந்து சிவனடியாராக மாறியவர்.
9. பூணூல் எத்தனை விதமாக அணியப்படுகிறது.
10. ப்ராம்மணர்களின் முக்யமான உபாஸனை தெய்வம் எது?

# வேதாந்த ஸாரம்

## ஸதானந்த யோகிந்த்ரர்

வேங்கடகணபதி சர்மா

## மெய்யுணர்தலின் படிகள்

### வேதாந்த க்ரந்த படனம்

**ஏவம் பூதஸ்வரூபசைதன்ய ஸாக்ஷாத்காரபர்யந்தம் ஸ்ரவண மனன, நிதித்யாஸன ஸமாதி அனுஷ்டானஸ்யாபேக்ஷிதத்வாத்தேபி ப்ரதர்சயந்தே ॥ 171**

*இப்படி மெய்யுணரும்வரை வேதாந்த க்ரந்தங்களை ஸ்ரவண, மனன,நிதித்யாஸன ஸமாதி இவைகளின் மூலம் அப்யஸிக்க வேண்டும். அவை சொல்லப்படும்.*

**ஸ்ரவணம் நாம ஷட்விதிலிங்கைரசேஷ வேதாந்தானாம் அத்விதீய வஸ்துனி தாத்பர்ய அவதரணம். ॥ 172**

*ஆறு தாத்பர்யலிங்கங்கள் மூலம் வேதாந்தத்தில் கூறப்பட்டுள்ள அத்விதீய வஸ்துவை கேட்டறிதல்.*

**லிங்கானி து உபக்ரம,உபஸம்ஹார,அப்யாஸ,அபூர்வதா பல, அர்தவாத உபப்த்யாக்யானி ॥ 173**

*ததுக்தம் உப்க்ரமோபஸம்ஹாராப்யாஸோ அபூர்வதா பலம்*
*அர்தவாதோபபத்தீ ச லிங்கம் தாத்பர்ய நிர்ணயே ‘‘’’*

*ஒரு பொருளின் பொருளை அறிய உபக்ரமம் உபஸம்ஹாரம் அப்யாஸம் அபூர்வதா பலம் அர்தவாதம் உபபத்தீ எனும் ஆறு லிங்கங்கள் பயன்படுத்தப்படும்.*

**ப்ரகரணப்ரதிபாத்யஸ்ய அர்தஸ்ய ததாந்த்யோருபபாதனம் உபக்ரம உபஸம்ஹாரெளந யதா சாந்தோக்யே ஷட் அத்யாயே ப்ரகரண ப்ரதிபாத்யஸ்ய அத்விதீய வஸ்துன ‘‘ஏகமேவாத்விதீயம்’’ இத்யாதெள ‘‘ஏதத் ஆத்மியம் இதம் ஸர்வம் இத்யந்தே ப்ரதிபாதிதம் 174**

*உபக்ரம உபஸம்ஹாரம் விளக்கம் ஆரம்பத்திலும் முடிவிலும் எந்த விஷயம் கூறப்படுகிறதோ அது உபக்ரம உபஸம்ஹாரம் எனப்படும். சான்று சாந்தோக்ய உபனிஷத்தில் ஆறாவது அத்யாயத்தில் ''ஏகமேவாத்விதீயம் என்று ஆரம்பித்து ஏஅதத் ஆத்மியமிதம் ஸர்வம்''*

**ப்ரகரணப்ரதிபாத்யஸ்ய வஸ்துனஸ்தன்மத்யே பொன:புன்யேன ப்ரதிபாதனம் அப்யாஸ: நயதா தத்ரைவாத்விதீய வஸ்துனி மத்யே ''தத்வமஸி'' இதி நவக்ருத்வ: ப்ரதிபாதனம் ॥ 175**

*அப்யாஸம் விளக்கம் ஒரே வாக்யத்தை மீண்டும் மீண்டும் அத்யாயத்தில் கூறல். சான்று சாந்த்ய்க்யத்தில் ''தத்வமஸி'' எனும் வாக்யம் ஒன்பது தடவை கூறப்படுகிறது.*

**ப்ரகரண ப்ரதிபாத்யஸ்ய வஸ்துனஸ்தன்மத்யே பௌன: புன்யேன ப்ரதிபாதனமப்யாஸ; ந யதா தத்ரைவாத்விதீயவஸ்துபி; மத்யே தத்வமஸி இதி நவக்ருத்வ: ப்ரதிபாதனம் ॥ 176**

*அப்யாஸம் எது விஷயமோ அதை திரும்பத் திரும்பக் கூறல் அப்யாஸம் எனப்படும். சாந்த்யோக்யத்தில் தத்வமஸி என்னும் வாக்யம் ஒன்பது தடவை கூறப்படும்.*

**ப்ரகரணப்ரதிபாத்யஸ்ய அத்விதீயவஸ்துன: ப்ரமாணாந்தரவிஷயீகரணம் அபூர்வதா.யதா தரிவாத்விதீயவஸ்துனோ மானாந்தர விஷயீகரணம் ॥ 177**

*வேறு எந்த ப்ரமாணத்தாலும் சொல்லப்பட முடியாததை அபூர்வதா என்பர். சான்று அதே சாந்தோக்யத்தில் அத்விதீயமான ப்ரம்மம் ஸ்ருதிகள் மூலமாக காட்டப்படும். வேறு ப்ரமாணங்கள் காட்டா.*

**பலம் து ப்ரகரணப்ரதிபாத்யஸ்ய ஆத்மக்யானஸ்ய தனுஷ்டானஸ்ய வா தத்ர தத்ர ஸ்ரூயமாணா ப்ரயோஜனம். யதா தத்ர ''ஆசார்யவான் புருஷோ வேத தஸ்ய தாவதேவ சிரம் யாவன் ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யதே'' இதி அத்விதீயவஸ்துஞ்யானஸ்ய தத்ப்ராப்தி: ப்ரயோஜனம் ஸ்ரூயதே ॥ 178**

*பலம் ஆத்மஞ்யானமே பலம் சாந்தோக்யத்தில் ஆசார்யனை அடைந்தவன் ப்ரம்மத்தை அறிவான். இந்த உடல் போகும் வரை அவன் பொறுமை காக்க*

*வேண்டும். க்ரந்தங்களின் பலன் ஆத்ம ஞ்யானமே. இதை அடிக்கடி க்ரந்தங்கள் சுட்டிக் காட்டும்.*

**ப்ரகரண ப்ரதிபாத்யஸ்ய தத்ர தத்ர ப்ரசம்சனம் அர்தவாத: ந யதா தத்ரைவ ''உத தமாதேசமப்ராக்ஷ்யோ யேனாஸ்ருதம் ஸ்ருதம் பவத்யமதம் மதமவிஞ்யாதம் விஞ்யாதம்'' இத்யத்விதீயவஸ்து ப்ரசம்ஸனம் ॥ 179**

*தான் எடுத்துக் கொண்ட விஷயத்தை வெவ்வேறு இடத்தில் புகழ்ந்துரைத்தல் அர்தவாதம் எனப்படும். சான்று ''இதுவரை கேட்காததை கேட்டிருக்கிறாயா? பார்க்காததை பார்த்துள்ளாயா? தெரியாததை தெரிந்து கொண்டிருக்கிறாயா?'' இப்படி ப்ரம்மத்தை புகழும்.*

**ப்ரகரணப்ரதிபாத்ய அர்தஸாதனே தத்ர தத்ர ஸ்ரூயமாணா யுக்தி:உபபத்தி: யதா தத்ர ''யதா ஸொம்யகேன ம்ருத்பிண்டேன ஸர்வம் ம்ருண்மயம் விஞ்யாதம் ஸ்யாத் வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேயேவ சத்யம் '' இத்யாதி அத்விதீயவஸ்துஸாதனே விகாரஸ்ய வாசாரம்பணமாத் ரத்வே யுக்தி ஸ்ரூயதே ॥ 180**

*எடுத்துக் காட்டு மூலம் விஷயத்தைப் புரிய வைப்பது யுக்தி எனப்படும். சான்று 'ஸொம்ய மண்ணினால் பல வடிவங்கள் பெறப்படுகின்றனவோ அவை யாவும் நாம ரூபங்களை விலக்கிவிட்டால் மண்ணே'' என்று கூறி ப்ரம்மத்தின் விகாரமே இவ்வுலகம் என்பது யுக்தி.*

*(தொடரும்)*

வாசகர்கள் மறக்காமல் சந்தா தொகையை செலுத்துமாறு வேண்டுகிறோம். உங்கள் நண்பர்களை ப்ரதீபத்தின் சந்தாதாரராக சேர ஊக்குவிக்க வேண்டுகிறோம்.

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம்.
மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா



மலைப்பாம்பின் கேள்விக்ளுக்கு விடையளித்து தன் தம்பிகளுடன் அளவளாவிக் கொண்டிருந்த தர்மரிடம் ஓர் அந்தணன் அரசே என்னுடைய சமீ சமித்களை ஒரு மான் கவர்ந்து போய் விட்டது. அதைத் தேடி எனக்குத் தர வேண்டும் என்று முறையிட பாண்டவர்கள் தங்களால் இயன்ற வரையில் முயன்றும் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சோர்ந்து போன அவர்கள் ஓர் ஆலமரத்தின் கீழ் அமர்ந்திருக்க தர்மர் அருகில் ஏதேனும் தடாகம் இருந்தால் நீர் கொண்டுவர பணிக்க நகுலன் காட்டின் உள்ளே போனான்.

தேடி கண்டு பிடித்தபின் நகுலன் அந்த தடாகத்தின் நீரைப் பருகச் சென்றான். அப்போது ஓர் அசரீரி சொன்னது. ''மாத்ரியின் புத்ரனே அவசரப்படாதே, இத்தடாகம் என்னுடையது. என்னுடைய கேள்விகளுக்கு விடையளித்த பின் நீரைக் குடி, எடுத்துச் செல்'' என்றது.

அச்சொல்லை அலக்ஷியப்படுத்திய நகுலன் தாக மேலீட்டால் நீரைக் குடிக்க அங்கேயே சுருண்டு விழுந்தான். இவன் வராதது கண்டு சஹாதேவன் அப்படியே செய்து விழுந்தான். பீமனும், அர்ஜுனனும் அப்படியே விழுந்தனர். தம்பிகள் வராதது கண்டு தர்மர் அங்கே சென்று நீரைக் குடிக்க எத்தனிக்க '' நில் தர்மா என் கேள்விகளுக்குப் பதில் சொல். பின்பு நீரைக்குடி'' என்றது.

**தர்மர்** ''கேளுங்கள் என் அறிவிற்குத் தெரிந்த வரையில் விடையளிக்கிறேன்''

**யக்ஷன்** ''தர்மத்தின் ஒரேகாரணம் எது? புகழுக்குக் காரணம் எது? மகிழ்ச்சிக்கும் ஸ்வர்கத்திற்கும் ஒரே காரணம் எது?

**தர்மர்** ஸாமர்த்யமே தர்மத்தின் காரணம், தானம் புகழுக்கும், உண்மை ஸ்வர்கத்திற்கும் சீலம் மகிழ்ச்சிக்குக் காரணம்.

**யக்ஷன்** மனிதனின் ஆத்மா யார் உற்ற நண்பன் யார்?

**தர்மர்** புத்ரன் அவனுடைய ஆத்மா மனைவி உற்ற நண்பன்

**யக்ஷன்** உயர்ந்த லாபமெது ? அதி மகிழ்ச்சி எது ?

**தர்மர்** ஆரோக்யம் உயர்ந்த லாபம். த்ருப்தியே அதி மகிழ்ச்சி.

**யக்ஷன்** தர்மத்தினும் உயர்ந்தது எது ? எப்போதும் பலன் அளிக்கும் அறமெது ? எதை அடக்கினால் நரன் அழமாட்டான்? எந்த நட்பு கிழடுபடாது ?

**தர்மர்** தீங்கு செய்யாமை தர்மத்தினும் பெரிது, வைதிக தர்மம் எப்போதும் பலனளிக்கும், மனதை அடக்குகிற நரன் அழுவதில்லை நல்லோர்களின் நட்பு கிழடுபடுவதில்லை.

யக்ஷன் எதைவிட்டால் நரன் ப்ரியனாகுகிறான்? எதை விட்டால் நரன் அழுவதில்லை? எதை விட்டால் தனவானாகிறான்? எதை விட்டால் மகிழ்கிறான்? தர்மர் மானத்தை விட்டால் ப்ரியனாவான். கோபத்தை விட்டவன் அழுவதில்லை, ஆசையை விட்டவன் தனவான், பொறாமையை விட்டவன் மகிழ்வான். யக்ஷன் தயை என்பது என்ன? நேர்மை என்பது என்ன?

**தர்மர் :**எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது தயை, ஸமசித்தனாக இருத்தல் நேர்மை. யக்ஷன் ஸ்னானம் எது ? தானமெது ?

தர்மர் மனத்துக்கண் மாசு இல்லாதிருத்தல் ஸ்னானம், பூதரக்ஷணம் தானம். யக்ஷன் இவ்வுலகில் ஆச்சரயமானது எது ? தர்மர் தினந்தினம் ஆயிரக்கணக்கான உயிரினங்கள் மரணம் அடைகின்றன. ஆனாலும் நீண்ட நாள் உயிர் வாழ மனிதன் ஆசைப்படுகிறான். இதை விட ஆச்சர்யமில்லை. யக்ஷன், நான் கேட்ட வினாக்களுக்கு சரியான விடையிறுத்தாய். உன் தம்பிகளுள் ஒருவனை பிழைக்க வைக்கிறேன். நீயே தேர்ந்தெடு. தர்மர் உயர்ந்த தோளுடையவனான நகுலன் பிழைக்கட்டும். யக்ஷன் ஏன் அவனைத் தேர்ந்தெடுத்தாய் ?

தர்மர் என் தந்தைக்கு இரு மனைவிகள். குந்தியின் புத்ரனாக நான் இருக்க மாத்ரியின் புத்ரனாக நகுலன் பிழைக்கட்டும். யக்ஷன் தர்மனே உனது காருண்யம் கண்டு மகிழ்ச்சி. தர்மம், அர்த்தம் இவற்றைவிட காருண்யம் பெரியது. உனது எல்லா தம்பிகளும் உயிர்

பிழைப்பர். நான் உன் பிதா தர்மதேவதை. அந்தணனின் சமித்துகள் என்னால் கவரப்பட்டன. அதை அவரிடம் தந்துவிடு. இன்னும் ஒரு வருடம் நீங்கள் மாறு வேடத்தில் விராட நகரத்தில் வசியுங்கள், க்ஷேமம் உண்டாகட்டும்.

வன பர்வம் முற்றும்

## விராட பர்வம்

அறத்தின் வழியில் நின்ற பாண்டவர்கள் பதிமூன்று ஆண்டுகள் மறைந்து வாழ்வது பற்றி யோசித்தனர்.

**யுதிஷ்ட்ரர் :** ''நான் விராட மன்னனின் சபையில் கங்கன் என்னும் பெயர் தாங்கி இருப்பேன்.

**பீமன் :** ''ராஜனே வலலன் என்னும் பெயர் கொண்டு அதே விராட மன்னனின் மடப்பள்ளியில் சமையல் காரனாய் இருப்பேன்''.

**அர்ஜுனன்:** ''நான் ப்ருஹன்னலை என்னும் பெயர் தாங்கி அந்தப்புரத்தில் உள்ள பெண்களுக்கு கீதம், ந்ருத்யம் கற்பிப்பேன்.''

**நகுலன் :** ''தாமக்ரந்தி என்னும் பெயர் கொண்டு அன்னாட்டின் குதிரை அத்யக்ஷனாய் இருப்பேன்''.

**ஸஹதேவன் :** ''நான் தந்த்ரிபாலன் என்னும் பெயர் தாங்கி பசுபாலனாய் அங்கிருப்பேன்.''

**த்ரௌபதீ :** '' நான் சைரந்த்ரீ என்னும் பெயர் கொண்டு விராட மன்னனின் மனைவி ஸுதேஷ்ணைக்கு ஒப்பனை செய்பவளாய் இருப்பேன்.''

இப்படி ஒருவருக்கொருவர் தீர்மானம் செய்துகொண்டபின் அவர்கள் பல வனங்களைக் கடந்து விராட நகரம் அடைந்தனர். அர்ஜுனன் இந்த சமீ மரம் உயர்ந்ததாக உள்ளது. இதில் நமது படைக் கலங்களை வைத்துவிட்டு நகரம் போவோம்''

அவன் கூறியபடியே அவர்கள் தங்கள் படைக்கலன்களை மூட்டை கட்டி சமீ மரத்தை வலம் வந்து அதன் மேல் உச்சியில் வைத்து நகரம் புகுந்தனர்.

தங்களின் உண்மை சொரூபத்தை மறைத்து விராட நகரில் அரசனிடம் சேவகம் செய்யத் தொடங்கினர்.

இப்படி நாட்கள் செல்ல விராட ராஜ்யத்தின் ஸேனாபதி கீசகன் த்ரௌபதியை இச்சித்தான். அவளுடைய எதிர்ப்பை மீறி அவன் பலாத்காரம் செய்ய முற்பட்டபோது மறைந்திருந்த பீமன் அவனை கொன்று ஒரு மாம்ஸ பிண்டமாக்கினான். இதன் நடுவில் துர்யோதனனின் ஆட்கள் கீசகன் கொல்லப்பட்டதை அவனுக்குத் தெரிவித்தனர்.

''அரசே காடுகள் மலைகள் பட்டனங்கள் அனைத்தும் தேடப்பட்டன.

*பாண்டவர்களைக் காணவில்லை. பராக்ரமம் பொருந்திய கீசகன் யாரோ ஒரு கந்தர்வனால் கொல்லப்பட்டான் என்று கேள்விப்பட்டோம்.*

*துர்யோதனன் ''கரந்து வாழும் பாண்டவர்கள் இப்போது பார்க்கப்பட்டால் மீண்டும் 13 வருடம் வனவாசம்தான். த்ரௌபதியை முன்னிட்டு கீசகன் பீமனால் கொல்லப்பட்டிருப்பான் என்று ஐயம் கொள்கிறேன். விராட நகரில்தான் அவர்களிருக்க வேண்டும். நாம் விராடம் நோக்கிச் செல்வோம். ஆநிரைகளை கவர்வோம். அவைகளின் ரக்ஷணத்தின் பொருட்டு பாண்டவர்கள் வருவர்''*

## ஸ்ரீமடம் மற்றும் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் கோவிலுக்கு புதிய ஸ்ரீகார்யம்



29.04.2021 வியாழக்கிழமை அனுஷத்தன்று ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்த்ர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீமடத்தின் புதிய ஸ்ரீகார்யமாக ஸ்ரீ சல்லா விஸ்வநாத சாஸ்திரி அவர்களை நியமித்தார்கள். அன்றே அவரது POWER OF ATTORNEY பதிவு செய்யப்பட்டது. ஸ்ரீ சல்லா விஸ்வநாத சாஸ்திரி சென்ற 10 வருடங்களாக ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானத்தில் ஸ்ரீ பெரியவாள் அவர்களின் ஸ்ரீகார்யமாக செயல்பட்டு வந்தார்கள். இதுவரை ஸ்ரீகார்யமாக இருந்து வந்த ஸ்ரீ காலடி விஸ்வநாத ஐயர் சிவலோக ப்ராப்தியடைந்ததையொட்டி இந்த நியமனம் செய்யப்பட்டது.



இதைத் தொடர்ந்து ஸ்ரீமடத்தில் சென்ற 28 வருடங்களாக பணியாற்றி வந்த ஸ்ரீ N. சுந்தரேச அய்யர், ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானத்தில் ஆதீன பரம்பரை தர்மகர்த்தாவின் ஸ்ரீகார்யமாக நியமிக்கப்பட்டார்கள். இவரது நியமனமும் அன்றே பதிவு செய்யப்பட்டது.

ஸ்ரீ விஸ்வநாத சாஸ்திரி அவர்களும், ஸ்ரீ சுந்தரேச அய்யர் அவர்களும் அன்றே தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டனர்.

# ஸ்ரீமத் பாகவதம் காட்டும் வாழ்க்கை நெறி 5

*ராமாயணம் ஸ்ரீனிவாசன்*

## பகவானுக்கு செய்யப்படும் அபராதங்கள்

- *மிதியடியுடன் ஆலயம் புகுதல்.*
- *ஜன்மாஷ்டமி போன்ற வ்ரதங்களைச் செய்யாதிருத்தல் அல்லது பகவானை தர்சிக்காமலிருத்தல்.*
- *பகவானின் வடிவைக் கண்டும் வணங்காதிருத்தல்.*
- *தூய்மையின்றி பகவானை தர்சித்தல்.*
- *ஒரு கையினால் வணங்குதல்.*
- *வலம் வரும்போது பகவான் சன்னிதியில் நிற்காமல் வலம் வருதல்.*
- *பகவத் சன்னிதி முன்பு கால் நீட்டி அமர்தல்.*
- *முழந்தாள் கட்டி அமர்தல், தூங்குதல், சாப்பிடுதல், கத்தி பேசுதல், வெட்டி வம்பளத்தல், பொய் பேசுதல், கத்துதல், சண்டை இடுதல், பிறரை துன்புறுத்தல், பிறரை ஆசீர்வதித்தல், கடிந்து பேசுதல்.*
- *19 கம்பளி கொண்டு போர்த்திக் கொள்ளுதல், பிறரை நிந்தித்தல், பிறரை புகழ்தல் அமங்கல சொற்கள் கூறல், அபானவாயு விடுதல், புறங்காட்டி அமர்தல், பிறரை வணங்குதல்.*
- *வசதி இருந்தும் அல்ப பூஜை செய்தல், பகவானுக்குப் படைக்காமல் உண்ணுதல், பழங்களை முழுமையாக நிவேதனம் செய்யாதிருத்தல்.*
- *குருவைக் கண்டால் எழுந்து வரவேற்றுப் பேசாதிருத்தல்.*
- *தற்புகழ்ச்சி செய்தல், கிடைக்கும் பொருளை பகவானுக்கு அர்ப்பணிக்காமல் இருத்தல். தன் இஷ்ட தெய்வத்தைப் புகழ்ந்து மற்ற தெய்வங்களை இகழ்தல்.*

**பகவானை விட்டு மற்றவர்களின் துணை நாடுபவன் :** இப்படிப்பட்டவன் முழு மூடன். நாயின் வாலைப்பற்றிக் கடலைத் தாண்ட விரும்புபவன்.

**வ்ருத்ராசுரன் பகவானிடத்தில் வேண்டல் :** ஹே ஹரி நாராயணா தங்களின் பாத கமலங்களை அடைந்த பக்தர்களுக்குத் தொண்டு புரியும் பேற்றை அடுத்த பிறவியிலாவது எனக்கு அருளுங்கள். எப்பிறவியாயினும் அதுவே எனக்கு வேண்டும். தங்களின் கல்யாணகுணங்களை மனம் நினைத்திருக்க வேண்டும்.

என் வாய் உங்கள் வாய்மொழிகளையே பாட வேண்டும். என் உடல் தங்கள் பணியே செய்ய வேண்டும். எல்லா செல்வங்களும் நிறைந்தவரே தங்களிடம் நான் நீங்கள் இல்லாத லோகமோ ஸாம்ராஜ்ய பதவியையோ அஷ்டமா சித்தியையோ புனர் பவத்தையோ விரும்பவில்லை. உங்களை விட்டுப் பிரியாததையே வேண்டுகிறேன்.

இறக்கை முளைக்காத பக்ஷிகுஞ்சுகள் தாய் பறவையின் வரவை எதிர் நோக்கி இருக்கும். பசியால் வாடும் கன்று தன் தாயை நோக்கிக் காத்திருக்கும். அயலூர் சென்ற கணவனின் பிரிவைத் தாங்காத மனைவி அவன் வரவுக்காகக் காத்திருப்பாள். அது போலவே என் மனம் உங்களையே எதிர் நோக்கிக் காத்திருக்கிறது.

பகவானே முன் வினையின் பயனால் மீண்டும் பிறவிகளை எடுத்து சம்சார சக்ரத்தில் உழல்கிறேன். நான் எங்கு சென்றாலும் எப்பிறவியிலும் உங்கள் பக்தர்களின் ஸங்கம் வேண்டும். லௌகிகமாக சிந்திக்கும் வீணர்களோடு தொடர்பு வேண்டேன்.

**மனிதனின் நல்ல, கெட்ட காலங்கள் :** ஒருவனுக்கு கெட்ட காலம் அவன் விரும்பாவிடினும் கெட்ட பெயர் மூலம் வரும். அது போல நல்ல காலமும் அவன் விரும்பாவிடினும் நீண்ட ஆயுள் நிறைந்த செல்வம் புகழ், மற்றும் விரும்புவன யாவும் தானே வந்து சேரும்.

**சம நோக்குத் தேவை :** ஆகவே புகழோ, அவப்பெயரோ, வெற்றியோ தோல்வியோ, இன்பமோ, துன்பமோ, இறப்போ, பிறப்போ இவை எதிலும் பற்று கொள்ளாமல் எந்நிலையிலும் சமநோக்குடன் இருக்க வேண்டும்.

**''தஸ்மாத் கீர்த்தி யஸசோ ஜயா அபஜயா யோ அபி**
**ஸம:ஸ்யாத் ஸுகதுக்காப்யாம் ம்ருத்யு ஜீவிதயோஸ்ததா'' ॥**

## வ்ரதம் கடைபிடிக்கும் போது தவிர்க்க வேண்டிய உணவுகள்

*எச்சில் பட்டசோறு, பத்ரகளிக்குப் படைக்கப்பட்ட சோறு, எறும்பு மொய்த்த அன்னம், வ்ருஷலன் தரும் அன்னம், மாம்சான்னம், மாதவிடாயில் உள்ள பெண் பார்த்த சோறு.*

**வ்ரதம் செய்பவர்கள் பெண்களாய் இருந்தால் என்ன கடைபிடிக்க வேண்டும்?**

*கால் அலம்பாமலும், தூய்மையற்ற நிலையிலும், ஈரக்காலுடனும் வடக்கு, தெற்கு திக்குகளில் கால் வைத்துப் படுக்கக்கூடாது. பர புருஷனுடன் பேசக் கூடாது, ஒற்றை ஆடையுடன் இருக்கக் கூடாது. காலை, மாலை காலத்தில் படுத்துறங்கக் கூடாது.*

**மனிதன் எப்படி மீண்டும் பிறவா நிலை அடைதல்**

*ஐந்து வகையாக அடையலாம் 1. காதல், 2. பகைமை, 3. பயம், 4. நட்பு, 5. பக்தி மனிதனும் இவைகளில் ஏதேனும் ஒன்றை கடைபிடித்து பிறவா நிலையை அடைய வேண்டும்.*

**ஒரு மனிதன் வாழ்வில் எங்கனம் நடந்து கொள்ள வேண்டும்**

*சான்றோர்களிடம் பணியாள்போல் அடிமை உணர்வு, ஏழைகளிடம் தந்தை போன்று வாத்ஸல்யம், தன்னை ஒத்தவர்களிடம் சகோதரன் போன்ற அன்பு குருவிடம் அவர் கடவுள் என்னும் மதிப்பு, பக்தி, கல்வி, செல்வம், அழகு, நற்குடி, பிறப்பு முதலியவை இருந்தாலும் செருக்கு இல்லாதிருத்தல். மிகுந்த துன்பத்திலும் வருத்தம் கொள்ளாமை, இம்மை, மறுமை, இன்பம், துன்பம் ஆகியவை பற்றி எவ்வளவோ கண்டும் கேட்டும் இருந்தாலும் அவை பொய்யானவை என்று மன உறுதியுடன் இருத்தல், புலன்கள், மனம், உடல் இவற்றை தன் வசம் கொள்ளல், தீய குணம் ஏதும் இல்லாதிருத்தல்.*

**பகவானின் பக்தனின் அடையாளம்**

*எவன் பகவானிடம் தன் விருப்பங்களை பூர்த்தி செய்ய வேண்டி வரம் கேட்கின்றானோ அவன் பக்தன் அல்ல. அவன் ஒரு வியாபாரி. தர்மத்தின் அடையாளம் தர்மம் என்பதற்கு வழி என்று பொருள் உண்டு. இயன்ற வரையில் வாழ்க்கையில் அதை பின்பற்ற வேண்டும்.*

*முப்பதுவிதமான தர்மத்தின் அடையாளங்கள் மனித இனம் அனைத்திற்கும் பொதுவானவை. இவைகளை முறையாகக் கடைபிடிப்பவர்களிடம் பகவான் மகிழ்கிறார்.*

அவையாவன ஸத்யம் தயை, தவம், மனம் வாக்கு காயம் மூன்றிலும் தூய்மையாக இருத்தல், எதையும் பொறுத்துக் கொள்ளல், அஹிம்ஸை, ப்ரம்மசர்யம், ஸத், அசத் என்று பகுத்தறிதல் வேதம் ஓதுதல்,நேர்மை இறையருளால் கிடைப்பதில் மகிழ்ச்சி, ஸம நோக்கு கொள்ளுதல், அப்படிப்பட்டவருக்குத் தொண்டு செய்தல், உலக வாழ்க்கையிலிருந்து மெல்ல விலகுதல், எதையும் ஆராய்ந்து தெளிதல், பயனற்ற செயல்களைப் போக்குதல், ஆத்மாவைபற்றித் தெரிந்து கொள்ளுதல், உணவு, தீனி முதலியவற்றை எல்லா ஜீவராசிகளுக்கும் பகிர்ந்து அளித்தல், அவைகளின் ஆத்மாவும் தானும் ஒன்றே என்று எண்ணி வழிபடும் தெய்வமாக கருதுதல். மேலே சொன்னவை பக்தி வழிக்குச் சாதனங்கள்.

தமிழிலே நாம் சொல்லிவருகிறோம் - தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்று. எல்லா நாட்டிலேயும் தென்னாட்டு மரபை, இந்த ஸம்ப்ரதாயத்தை ஏற்பாடு செய்தவர் ஆதிசங்கரர்.



ஸம்ஹாரம் என்று சொன்னால், அக்ஞானத்தை ஸம்ஹாரம் செய்பவர், சிவபெருமான், ஞானத்தை அளிப்பவர் சிவபெருமான்.

கீழ என்ன இருக்குன்னும் தெரியாது, இருக்கறது சிவலிங்கம்னும் தெரியாது, இவர் ஒக்காந்துண்ட்ருக்கறது பில்வம்-ங்கறதும் தெரியாது. பில்வத்துக்கும் சிவபெருமானுக்கும் இருக்கக்கூடிய தொடர்பும் தெரியாது.

அப்படிப்பட்ட ஒரு மனிதன், அந்த நேரத்துல, பார்வையை மறைக்கிறது என்பதற்காக கிளையை வெட்ட, அந்த பில்வம், சிவலிங்கத்தின்மீது பட்டு, அவருக்கு புண்யம் கிடைத்தது, என்று ஐதீஹம்.

# தத்வ சிந்தனை

இளம்பூரணர்

**''குர்வன்னேவ கர்மாணி ஜிஜிவிஷேத் சதம் ஸமா:**
**ஏவம் த்வயி நான்யதேதோஸ்தி ந கர்ம லிப்யதே நரே ''**

*கர்மாக்களை செய்து கொண்டே நூறு வருஷங்கள் வாழ்வாயாக. இதை விட்டால் வேறு வழியில்லை. அதனால் கர்மங்களும் உன்னை ஒட்டாது. இம்மந்த்ரம் ஈச உபனிஷத்தில் இரண்டாவது மந்த்ரம். முதல் மந்த்ரத்துக்கு அனு மந்த்ரம் என்றும் கூறலாம். முதல் மந்த்ரத்தில் ஈஸ்வரனால் உலகம் போர்த்தப்படவேண்டும். ஈஸ்வரனைச்சார்ந்ததே இவ்வுலகம். அப்படிப்பட்ட த்யாகத்தால் பற்றற்று உலக க்ருத்யங்களை நடத்த வேண்டும்.*

*இது எல்லோருக்கும் ஸாத்யமில்லை. அப்படியாயின் மற்றவர்கள் என்ன செய்ய வேண்டும். நூறு வருஷம் கர்மாக்களைச் செய்து கொண்டே ஜீவிக்கலாம். எப்படி? அக்னிஹோத்ரம் போன்ற சுபம் கர்மாக்களை செய்துகொண்டு என்று ஸ்ரீ சங்கரர் உரைக்கிறார். அந்த அக்னி ஹோத்ரமும் எல்லாராலும் செய்யமுடியாதே. என்ன செய்வது என்ற கேள்வி. சுபம் கர்மா என்று அவர் கூறும் நல் வினை என்னும் வார்த்தையை கொஞ்சம் நீட்டிக்கலாம். வேதம் நிவ்ருத்தி ப்ரவ்ருத்தி என்று இரு வினையைக் கூறும்.*

*ஸன்யாசிக்கு நிவுருத்தி மார்கம், மற்றவர்களுக்கு ப்ரவ்ருத்தி மார்கம். ஏதோ ஆபீசுக்குபோதல் பணம் சம்பாதித்தல் குடும்பம் தாங்கல் இவைகளை எல்லோரும் செய்கிறார்கள். உண்மை இவை தவிர்க்க முடியாதவை. இவை கடமை. இவைகளைக் கூட பகவானுக்கு அர்ப்பணித்துச் செய்வது சுபம் கர்மா. இது தவிர பல நல்லுள்ளங்கள் தர்ம ஸ்தாபனங்கள் வழியாக எத்தனையோ தர்ம கார்யங்களை செய்து வருகிறார்கள். இது பூர்த்த தர்மம் என்றழைக்கப்படும். இந்த தர்மத்தைச் செய்வதனால் ப்ரம்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படுமா என்றால் ஏற்படாது. ஆனால் இதன் மூலமாக சித்த சுத்தி ஏற்படும், ஞானத்திற்கு திறவுகோலாகும். இப்படி தர்மத்தை சுபம் கர்மாவைச் செய்பவர்கள் நான் இதைச் செய்யவில்லை, எந்த புகழுக்காகவும் செய்யவில்லை. பகவத் ப்ரீதிக்காக இதைச் செய்கிறேன் என்று செய்தார்கள் என்றால் அதன் பலன் சொல்லி மாளாது. ராமக்ருஷ்ண பரம ஹம்ஸரின் சில உவமைகள் இதை விளக்கும்.*

*'' நீ எந்த கர்மத்தை வேண்டுமானாலும் ஆத்ம ஸாதனமாகச்செய்யலாம். அக்கர்ம பலனில் பற்று சிறிதும் வைக்காது, ஈஸனுக்கு ஒப்படைத்துவிடின் அது நல்ல ஆத்ம*

*ஸாதனமாகிறது.''*

*''நீ எங்கிருந்து எந்த செயலை செய்து கொண்டிருந்தாலும் மனதை மட்டும் சதா சர்வ காலமும் தெய்வத்தின் திருவடியில் வைத்திரு.'' ''நிஷ்காம்ய கர்மம் புரிவது கடினம். மனிதன் உலகுக்கு ஏதோ நன்மை செய்கிறான். அது பாராட்டத்தக்கது. ஆனால் உலகுக்கு நான் நன்மை செய்கிறேன் என்னும் செருக்கு வரலாகாது. அத்தகைய செருக்கு உடையவனிடத்தின் சாதனையில் முன்னேற்றம் வராது.''*

*''முதலில் கையில் எண்ணையைப் பூசிக்கொள். பிறகு பலாப்பழத்தை அரிந்தெடு. இல்லையேல் அதன் பிசின் கையில் ஒட்டிக் கொள்ளும். முதலில் ஈஸ்வர பக்தியை வளர். பின்பு உலக கார்யங்களில் ஈடுபடு. இல்லையேல் உலகப்பற்று உன் உள்ளத்தில் ஒட்டிக்கொள்ளும்.''*

*அக்னிஹோத்ரம் செய்ய முடியாத நிலையில் நாம் இருந்தாலும் மேற்கூறியவாறு இருக்கத் தலைப்படலாம். கர்மத்தளை போக கர்மாவைச் செவ்வனே செய்தலே. இறுக்கிக் கட்டப்பட்ட சுள்ளிக்ச கட்டை அவிழ்க்க இன்னும் இறுக்கக் கட்ட வேண்டும், அப்போது கட்டு அவிழ்ந்துவிடும்'' இது மகாபெரியவா வாக்கு. இப்படி சுபம் கர்மாவைச் செய்ய முயலுவோம்.*

*(தொடரும்)*

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்
சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும்
சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது
கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்''

# ஸனாதன தர்மம் :

ரா ஸ்ரீ




146. **கேள்வி : எவருக்கு நமஸ்காரம் செய்யக் கூடாது?**

**பதில் :** எவருக்கு நாடு, பெயர், கோத்ரம் தெரியாதவர்கள், கன்யாதான சமயம், ஸ்ராத்தகாலம், மூர்க்கர்கள், பாதகம் செய்தவர்கள், காலணி அணிந்துள்ளவர்கள், ஓடிகொண்டிருப்பவர், பைத்யம் பிடித்தவர்கள், உணவு உண்டபின் ஆசமனம் செய்யாதவர்கள், நாஸ்திகர்கள், ஜபம் செய்து கொண்டிருப்பவரை, நீரில் நின்று கொண்டிருப்பவரை, தர்ப்பம், புஷ்பம், அக்னி ஆகியவற்றை எடுத்துச் செல்பவரை, பணத்திமிர் பிடித்தவனை, குளித்துக் கொண்டிருப்பவனை, நமஸ்காரம் செய்யாத போதே ஆசீர்வாதம் செய்யும் ப்ராம்மணர்கள் சபைகளில் யஞ்ய சாலைகளில் கோவில்களில் (த்வஜஸ்தம்பம் தவிர மற்ற சன்னிதிகளில்) குளித்திருந்தாலும் நெற்றியில் திலகம் அணியாத ப்ராம்மணர்கள் மேற்கூறியவர்களுக்கு நமஸ்காரம் செய்யக்கூடாது.

134. **கேள்வி : த்யானம் எத்தனை வகை?**

**பதில் :** ஸரூபம், அரூபம் என்று இரண்டு வகை.

135. **கேள்வி : ஸரூபத் த்யானம் விளக்குக**

**பதில் :** ஓர் உருவத்தை எதிரில் வைத்துக் கொண்டு த்யானிப்பது.

136. **கேள்வி : வில்வத்தை எந்த தெய்வத்திற்குப் பயன்படுத்தக்கூடாது?**

**பதில் :** சூர்யன், கணபதி

137. **கேள்வி : பகவானுக்கு எந்தெந்த புஷ்பத்தைச் சாத்தக்கூடாது?**

**பதில் :** விலை கொடுத்து வாங்கியது, நிர்மால்ய புஷ்பம், நீரில் நனைந்தது.

138. **கேள்வி : எந்த புஷ்பங்களால் எந்த தெய்வங்களுக்குப் பூஜை செய்யக் கூடாது?**

**பதில் :** விஷ்ணு அக்ஷதை, விநாயகர் துளஸீ, அம்பாள் அருகம்புல், சூர்யன் எருக்கம் பூ.

139. **கேள்வி : தீபத்திற்கு நெய், எண்ணெய் ஊற்றி ஏற்றலாமா?**

**பதில் :** தனித்தனியாகத்தான் ஏற்றலாம்.

140. **கேள்வி : எந்தெந்த தெய்வங்களுக்கு எத்தனை ப்ரதக்ஷிணம் செய்ய வேண்டும்?**

**பதில் :** வினாயகர் ஒன்று, சூர்யனுக்கு இரண்டு, சிவபெருமானுக்கு மூன்று, விஷ்ணுவிற்கு நான்கு, அரச மரத்திற்கு ஏழு.

141. **கேள்வி : பூஜை எத்தனை விதம்? விளக்குக**

**பதில் :** மூன்று விதம், உத்தமம், மத்யமம், அதமம். தானே பூஜை செய்வது உத்தமம் மகன், சகோதரர்கள் மூலம் செய்வது, மத்யமம் ஒருவரை வேலையில் அமர்த்தி செய்வது அதமம்.

142. **கேள்வி : துளஸீ பறிக்கும்போது சொல்லப்படும் மந்த்ரம் யாது?**

**பதில் :** துளஸீ அம்ருத ஜன்மாஸி ஸதா த்வம் கேஸவப்ரியே
கேஸவார்தம் சினோமி த்வாம் வரதா பவ சோபனே ॥
த்வதங்க ஸம்பவை: பத்ரை: பூஜயாமி ஸதா
ததா குரு பவித்ராங்கீ கலௌ மலின வினாசினீ॥

143. **கேள்வி : துளஸீ பூஜையின் போது சொல்ல வேண்டிய ஸ்லோகம்**

**பதில் :** ஸௌபாக்யம் ஸந்ததி தேவி தனம் தான்யம் ச மே சதா
ஆரோக்யம் சோக சமனம் குரு மே கேசவப்ரியே ॥

144. **கேள்வி : மூர்த்தி பூஜை செய்வதற்கு வேதத்தில் ஆதாரம் உள்ளதா?**

**பதில் :** ஸாம வேதத்தில் ஐந்த்ர பர்வத்தில் உள்ளது. அ 4 கா 2 மந்த் 3, அஷ்டக 6, அனு 5, ஸூ 58, மண்டலம் 8, ரிக் வேதம், தைத்ரியம் ப்ரபாடகம் 4, அனுவாகம் 5, சதபத ப்ராம்மணம் 11 1 3.

145. **கேள்வி :** முன் காலத்தில் மூர்த்தி பூஜை இருந்தது என்பதற்கு ஆதாரம் என்ன?

**பதில் :** படைப்பிற்கு முன்னால் விஷ்ணுவை ரிஷிகள் ஆராதனை செய்தனர் என்று யஜுர் வேதம் அஷ் 31 மந்த்ரம் 9 இல் கூறப்பட்டுள்ளது. சுக்ல யஜுர் வேதம் அஷ் 37 மந்த்ரம் 3, ஸாம வேதம் 14/1 17

146. **கேள்வி : பகவானுக்கு கை கால்கள் கூட வர்ணிக்கப்பட்டுள்ளதா?**

**பதில் :** ஆம் யஜுர் வேதம் அஷ்டகம் 31 மந்த்ரம் 11 (புருஷஸூக்தம்)

147. **கேள்வி : அவதாரங்கள் பற்றி கூறப்பட்டுள்ளதா?**

**பதில் :** ஆம் ஸாம வேதம் ஐந்த்ரபர்வம் அஷ்2, கா 11, மந்த்ரம் 9, யஜுர் வேதம் அஷ் 5, மந்த்ரம் 20.

148. **கேள்வி : பகவான் கைகளில் ஆயுதம் உள்ளதாக கூறப்பட்டுள்ளதா?**

**பதில் :** ஆம் அஷ் 3, கா 1, ஸூக்தம் 2, மந்த்ரம் 23 ஸாமவேதம்.

149. **கேள்வி :** பகவானுக்கு மனைவி இருப்பதாக கூறப்பட்டுள்ளதா?

**பதில் :** ஆம். யஜுர் வேதம் அஷ்31, மந்த்ரம் 22 (புருஷ ஸூக்தம்)

150. **கேள்வி :** கருடன் போன்ற ரூபங்கள் வடிக்கப்படுகின்றனவே இதற்கு ஆதாரம் உண்டா?

**பதில் :** உள்ளது. ருக் வேதம் மண்ட் 3, அஷ் 4, ஸூக் 53 இதற்கு ஆதாரம். இதற்கு நிருக்தம் கீழ்கண்டவாறு பொருளுரைக்கிறது. பக்தன் எந்த எந்த வடிவை விரும்புகிறானோ அந்த ரூபத்தை தரித்துக் கொள்கிறான்.

151. **கேள்வி : பகவானின் மூர்த்தங்களை எந்த பொருள் கொண்டு வடிக்கலாம்?**

**பதில் :** கல், மரம், செம்பு, வார்ப்படம், சித்ரம், மணல், மனம், நவரத்ன கற்கள் என்று எட்டு வகை பொருள்களைக் கொண்டு செய்யலாம். ஆதாரம் ஸ்ரீமத் பாகவதம் ஸ்காந்தம் 11, அத் 27, ஸ்லோகம் 12.

152. **கேள்வி :** சிலர் கைகளில் சின்னம் தரிப்பதற்கு வேதங்களில் ஆதாரமுண்டா?

**பதில் :** அதர்வ வேதத்தில் பகவான் விஷ்ணுவின் சின்னங்களைத் தரிப்பவர்கள் இஹ லோகத்தில் எல்லா ஸுகங்களையும் அனுபவித்து வைகுண்டம் ஏகுவர் என்று கூறுகிறது. பராசர ஸம்ஹிதையும் இதை ஆமோதிக்கும். சங்கு சக்ர சின்னத்தை தரித்துள்ள வைஷ்ணவர்கள் நான்கு வர்ணத்தவர்களாலும் பூஜிக்கத் தகுந்தவர்கள் என்று பீஷ்ம பர்வம் என்னும் க்ரந்தம் கூறும். (தொடரும்)